உ

கடவுள் துணை.

புலிப்பாணிமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிச்செய்த

வைத்தியம்.

ருா

இஃது

ஆயுள்வேதபாஸ்கரர்

திரு, வேங்கடசாமிபண்டிதரவர்களால்

அச்சிட்டபிரதிக்கிணங்க

தமிழ்ப்புலவர்

க. வே. சுப்பராயமுதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு,

அ. வீராசாமிநாயகரவர்களால்

நுங்கம்பாக்கம்

இரத்திநமுதலியார்

அவர்களது

சண்முகவிலாச

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

௲அ௬௪ ௵ ஜூலாய்மீ.

1864

முகவுரை.

நித்தியாபரோக்ஷகர்த்தவியஞ்சிருஷ்டித்த அண்டகோடி சக
ல புவன திரயங்களில் ததாகார இப்பூகோளத்திநிறைந்த மானிடர்
கட்கு, பரிபின்ன ரூபத்திற்கடுத்தபடி - புசிக்குந்தன்மையினளவை
தப்பிமலமிழ்தமும் விஷமாமே - மிகினுங் குறையினு நோய்ச்செய்
யுமாகையில் வேளைதப்பி நீந்து தக்கபடி நடவாமல், போசன பதார்த்
தங்களாலும், புலாலினாலும், கலவிசேஷ்டையாலும், பசியாலும், கடு
வழிநடையாலும், எழுபத்தீராயிர நாடிகட்கு நாலாயிரத்து நானூற்று
நாற்பத்தெட்டு வியாதிகள் பிறந்து தசநாடிகளிலுங் கலந்து அக்கினி
யின் மூக்குணக்கூறாம்பத்தியாகிற - வாயு, சலம், தீ, இவைபோல் பிர
தான மூன்று நாடிகளிலசைவாடி நன்மை தீமைகளைக்காட்டுந் த
ன்மையினுள் மேற்படி வியாதிகட்கு * அவ்வியத்தமானவோடதிகளி
னும்பர்வதோற்பத்தி முப்பத்திரண்டு - பறங்கிவைப்பு முப்பத்திர
ண்டாகிய - அறுபத்துநாற் பாஷாணங்களினு முபரசங்களாற்றிரு
பாணினும் - பெரியவர்க்குஞ், சிறியவர்க்கும், உரியவர்க்கும், வறியவர்க்
கும் ஔஷதங்களாகச் சூசனையிற் சொல்லிய ப்புலிப்பாணிவைத்தி
யவைகளை யாவரு மெளிதி னுணர்ந் தறியும்பொருட்டு, உலோ
கோபகாரமாகவச்சிற்பதித்தனம். இதனில் யாதொரு பிறழ்ச்சியிரு
ப்பினுஞ் சிகிச்சாவேத நிபுணத்வவறிஞர் மன்னித்தருளவும்

---

* அவ்வியத்தம்-கோடிகோடிகோடி-கோடாகோடி. அவை-கொடி
செடி, பூடு, மரம் — அவற்றுள் - வேர், மரம், இலை, பூ, காய், பழ
ம், பால், பட்டை, வித் தென்பவைகளேயாம்.

இது, இந்நூலச்சியற்றிய - ஆயுள்வேதபாஸ்கரர்
திருவேங்கடசாமிபண்டிதரவர்களாலெழுதப்பட்டது.

கடவுள் துணை.

அவிழ்தங்களின் அகராதி.

அவிழ்தங்களின் பெயர்கள்,	பக்கம்,	செய்யுள்
அக்கரசஞ்சீவிமாத்திரை	௮௨	௪௭௯
அக்கினிபிளாஸ்திரி	௭௰	௪௱௪
அக்கினிமந்தத்திற்குலேகியம் ...	௫	௯௯௪
அசுபதிநட்சேத்திரமுதல்நன்மைதீமையறிய	௪௧	௨௯௨
அண்டமெழுகு	௭௯	௪௫௬
அண்டவிபாகிக்கெண்ணெய் ...	௪	௨௧
அமிர்தசஞ்சீவிமாத்திரை	௮௨	௪௭௰
அரிதாரபற்பம்	௬௰	௯௪௨
அரையாப்புக்கு	௯	௪௮
அர்த்தஜுரமாத்திரை	௮௧	௪௬௮
ஆக்கிராணம்	௬௧	௯௫௧
ஆ[illegible]ாதபேய்ஆட	௬௯	௯௯௫
இடிவல்லாதி	௰	௨௨௭
இரசசிந்தூரம்	௯௯	௨௱௰௭
இரணங்களுக்குப்புகை	௰௪	௭௪
இரணமாறுகிறபிளாஸ்திரி ...	௬௨	௯௫௬
இரணமாறுகிறபிளாஸ்திரி ...	௭௧	௪௱௬
இரணமாறுகிறபிளாஸ்திரி	௭௧	௪௱௮
இரத்தகெட்டதுக்குசீதபேதிக்குசூரணம்	௭௧	௪௱௯
இரத்தசாமுண்டிசக்கரம்	௮௫	௪௮௪
இரத்தசாமுண்டிமந்திரம்	௬௬	௯௮௯
இராமபாணசுரக்குளிகை	௬௮	௯௯௪
இருமலுக்குலேகியம்	௫௬	௯௨௨
இல்வனச்சிந்தூரம்	௯௰	௱௬௮
ஈளைகாசம்பெருமூத்திரக்கீநீரடைப்பு கிரிச்சினம்பெரும்பாட்டிக்கு லேகியம்	௮௰ ௭௬	௪௫௮ ௪௯௯
உஷ்ணகாந்தலுக்குக்கியாழம்	௫௨	௯௮
எலிக்கடி-ய அ-க்கும்	௰௭	௯௨
ஏவல்தீர்க்க	௬௮	௯௯௯
ஐந்தெண்ணெய்த்தயிலம் ...	௭௯	௪௱௰௮

அவிழ்தங்களின்பெயர்	பக்கம்,	செய்யுள்
ஓடுக்கான் தயிலமந்தாரச்சன்னிக்கு	௯௯	௱௮௭
ஒருதலைநோய்க்குநசியம்	௫	௨௪
கடுகெண்ணெய்	௯௬	௨௱௯
கட்டுவாதிமாத்திரை	௮௯	௪௭௮
கண்கள் பில்லிவஞ்சனைபோகதீபம்	௬௯	௯௯௬
கண்ணில்நீர்வடிதலுக்குமை...	௭	௯௯
கண்படலந்தீரத்நாதிகுளிகை... ...	௬	௨௮
கண்வலிக்கெல்லாம்...	௭	௯௬
கர்ப்பமுண்டாக எண்ணெய் ...	௨௮	௱௫௬
கர்ப்பூரக்குளிகை	௯௫	௱௯௪
கழிப்புச்செய்யுப்விதம்	௬௬	௯௮௨
கற்சிலையைப்பெண்ணுக்கினது	௨௬	௱௪௯
கற்றாழைநாற்றந்தீரகூட்டு...	௮௭	௪௯௬
காப்பு	௧	௧
காதுவலிக்கெண்ணெய்	௫	௨௬
காதடைப்புக்குத்தயிலம்	௯௪	௱௮௯
கிரகசாரத்துக்கு	௨௩	௱௨௬
கிரந்திக்கெண்ணெய்	௰௫	௭௯
கிரந்தியனாயாப்புக்கெண்ணெய்	௨௫	௱௯௮
குஷ்டத்துக்குமருந்து... ...	௰௯	௱௫
குடைச்சலுக்குதயிலம்	௫௨	௩௱
குடைச்சலுக்குவேதுதண்ணீர் ...	௫௯	௯௱௧
குமட்டிக்காய்பதங்கம்	௪௫	௨௫௭
குழந்தைகட்குவாந்திகண்டால்	௮௬	௪௯௰
குழந்தைகள்சிரங்குக்கு...	௮௬	௪௯௧
குன்மம்வாந்தியேப்பம் வாய்நீருக்கு கியாழம்	௫௫	௯௱௰௫
குன்மம்-௬-க்கு-, உப்பு...	௯	௰௫
குழந்தைகளுக்கு சுரமுதலியதோஷங்களுக்கு அமிர்தசஞ்சீவி குளிகை ...	௮௫	௪௮௫
கெந்தகரசாயனம்...	௪௭	௨௬௮
கெர்தகரசாயனம்	௫௬	௯௨௪
சகலகர்மசாந்தி... ...	௬௫	௯௭௨
சகலமேயக்கங்குளிசம்	௬௯	௯௯௮
சகலமேகங்களுக்கு ரசகெந்திமெழுகு ...	௪௪	௨௪௮
சகலரணங்களுக்குசளிம்பு	௰	௫௯

அவிழ்தங்களின்பெயர்கள்	பக்கம்	செய்யுள்
சகலரோகத்துக்கு சித்திரமூலஎண்ணெய் ..	௬௧	௯௪௯
சகலரோகத்துக்கு குட்சகுளிகை ...	௬௰	௩௪௪
சகலவிஷங்களுந்தீரமருந்து	௰௯	௱௨
சதுரகிரி	௩௰	௱௬௬
சன்னிக்குமேல்பூசத்தயிலம்	௨	௬
சன்னிகள் பசாசுகள் விஷங்கள் மயக்கத்துக்கு அகத்திசர்கலிக்கம்	௰௭	௫௬
சன்னிக்கு எண்ணெய்	௰௧	௬௰
சாதிலிங்கக்கட்டு	௩௨	௱௭௯
சிதம்பரமெழுதிக்கட்ட	௬௮	௩௯௰
சிவகிரிவளப்பம்	௨௯	௱௯௩
சிறங்குக்கு மேல்பூசுதயிலம்... ...	௮௬	௪௯௩
சிறுபாம்புகடிக்குமருந்து	௧௯	௱௪
சிறுபிள்ளைகளுக்குகட்டுவாதிமாத்திரை	௮௪	௪௮௨
சிறுபிள்ளைகளுக்கு காதில் சீய் வடிகிறதற்கு ரவிதயிலம்	௮௫	௪௮௭
சிறுபிள்ளைகள் பெருக்கநெய்... ...	௮௫	௪௮௮
சீரகச்சூரணம்	௫௯	௩௩௯
சுகபேதிசூரணம்...	௩௧	௱௭௪
சுரங்களுக்குகியாழம்	௪௯	௨௭௮
சுரத்தின்மேல்சுரமீறினால்	௪௯	௨௮௧
சுரமாத்திரை...	௧	௨
சுத்தவல்லாதிஎண்ணெய்	௭௬	௪௩௪
சூட்டுக்குமுழுகதாமரைத்தயிலம்	௬௨	௩௫௯
சூதகவலிக்கு உப்பு	௨	௯
சூதச்சிந்தூரம்...	௪௭	௨௬௫
சூட்டுக்குகுடிநீர்...	௫௧	௨௯௩
சூரியந்தீரப்புகை... ...	௨௨	௱௰௯
சூரியந்தீர்க்க எண்ணெய்	௪௪	௱௨௯
சூலைக்கு	௨௮	௱௫௫
சூலைவாயுமேகத்துக்குதயிலம்	௩௰	௱௭௰
சூலை(௰௮)க்குங்கியாழம் ...	௩௨	௱௮௧
செங்கிரந்திதடிப்புக்கு	௩௩	௱௮௫
செய்யான்பெருச்சாளிகடிக்கு	௩௩	௱
சேர்மானவேதை	௩௭	௨௱௰௮

அவிழ்தங்களின்பெயர்கள்	பக்கம்	செய்யுள்
சோகை காமாலை வீக்கம் நீர்க்கோவை பாண்டுமகோதரம்பீலிகைஇவைகளுக்குக்கியாழம்	௰௨	௯௯
சோகை காமாலைக்கு லேகியம்... ...	௬௭	௨௯௰
தந்தவியாதிகளெல்லாம்பொடி	௭	௫௮
தலைப்பேனுக்குமாரணம்...	௮௭	௪௬௭
தலைவலிசன்னிக்குப் புகை	௬௫	௧௬௫
தளம் கண்டாவிழ்தம்	௫௰	௨௮௭
தாகத்துக்கு கியாழம்...	௫௧	௨௮௬
தாளகபற்பம்	௫௪	௫௧௰௨
திலர்தம் செய்யுங் கிரியை	௭௰	௪௧௨
தீரும்வியாதி	௰௪	௭௯
தீரும்வியாதிகள்	௫௭	௫௨௬
தீரும்வியாதிகள்	௫௮	௫௫௪
துவளை	௨௬	௧௯௰
தேவிக்கு ஏகமூலம்	௨௨	௧௰௮
தேள்காலி விஷீர்த்திரமூலிகை... ...	௰௬	௧௧
நஞ்சுண்டவர்க்குங்கற்பமழிக்கவும் ...	௨௰	௧௬
நமனைசமெழுகு	௮௰	௪௯௧
நல்லசகுனம்	௪௬	௨௭௭
நவக்கிரகதியானம்...	௨௫	௨௨௭
நன்மைதீமைஅறிய மரணநாளறிய ...	௪௫	௨௪௯
நீரடைப்புக்குவாழைக்கிழங்கின்நீர் ...	௪	௰௮
நீரிலிரத்தங்கண்டால்	௰௫	௭௧
நீரொரிவுக்கு...	௫௬	௨௧௰௬
நூல்தொகை	௮௮	௪௬௬
நோய்க்கும் பேய்க்கும் ஓமசாந்தி ...	௯௫	௬௭௫
பச்சைகர்ப்பூரமாத்திரை	௮௪	௪௮௰
பஞ்சமுககிந்தூரம்	௫௮	௨௧௰௫
பஞ்சீகரணச்சிந்தூரம்	௬௭	௨௧[illegible]
பஞ்சீகரணமாத்திரை...	௫௮	௨௧௰௫
பயித்தியத்திற்கு	௯௬	௬௬௭
பயித்தியந்தீர...	௬௮	௨௭௫
பயித்தியந்தீர...	மேற்படி	௨௭௪
பல்நோயுக்குப்பொடி	௫௯	௧௬௯
பல்புழுச்சாக	௮	௪௰

அவிழ்தங்களின்பெயர்கள்-	பக்கம்	செய்யுள்.
பறங்கிப்பட்டைபதங்கம் ...	கூகூ	உஉக
பறங்கிப்பட்டைரசாயுனம்	ருஅ	ஙகூரு
பார்வைக்குக்குளிகை	உக	ாயரு
பித்தவெடிப்புக்கு	யகூ	எய
பித்தபயித்தியத்திற்குபற்பம்... ...	சாய	கூசாசா
பிரமனுக்கும் வாசவனுக்கும்சாபம் ...	உசா	ாசஉ
பிரமேகத்துக்கு எண்ணெய்	ஙக	ாஎஉ
பிரம்மைக்கு அண்டபற்பம்	உஉ	ாஉஉ
பில்லிக்குத்துவளை...	சரு	உருசா
பில்லிபயித்தியத்திற்கு	சாக	ஙசஅ
பில்லிவஞ்சனைநோயுந்தீர்ப்பதற்குகிரியை...	ஙஅ	ஙகூங.
பிள்ளைபெறமாட்டாதவர்க்கு ...	அஎ	ஙகூச
பிள்ளைகட்குபேதிமாத்திரை	அங	சஎசா
பீநசத்துக்குநசியம்	௬	உரு
பீநசத்துக்கெண்ணெய்... ...	எஅ	சசசா
புலிப்பாணிபூசித்தது	உசா	ாசரு
புகை...	உகூ	ாசாக
புரையாநிரணங்களுக்குத் தயிலம்... ...	ஙகூ	உஉய
பூரான்கடிதீர	யஅ	கூகூஉ
பூரக்களிம்பு	ருஉ	உகூஎ
பூனைகடிதீரகுளிகை	யஎ	கூரு
பெரும்பாட்டுக்குமருந்து	ங	யச
பேதிமாத்திரை...	ஙச	ாகூ
பேய்ப்பூதம்ஓடிப்போகமை	எய	சா
மருந்தீட்டுக்குச்சிட்சை... ...	உய	ாஎஉ
மருந்தீட்டுக்குமுறிவுசத்தியாக	ஙஉ	ாஎஎ
மரணநாளறிப...	சங	உசசா
மருந்தீடுமுறிய	உஅ	ாருச
மாலைக்கண்ணுக்குமை	சா	ஙக
மாந்ததோஷத்துக்கு குளிகை ...	ருங	ஙாரு
மூகசன்னிக்கு எண்ணெய்	யக	ருஅ
மூழங்கால்வாதம்	யங	எஉ
மூளைமூலத்துக்குசட்டு	ருசா	ஙஉச
மூலரோகத்திற்குச்சூரணம்... ...	உரு	கஙகூ
மெத்தலை வியாதிக்கெண்ணெய் ...	கூ	யகூ

அவிழ்தங்களின் பெயர்கள்	பக்கம்,	செய்யுள்
மேகதடிப்பு புள்ளிக்கு... ...	௯	௪௭
மேகம்(உக)க்கும்வாய்நாற்றத்துக்கும்எண்ணெ-	௰௬	௮௮
மேருவுக்குவடக்குமனிதர்	௨௬	௧௪௬
மேல்சொல்லியவைமையினால்திருங்கிரியை	௭௰	௪௧௩
மேஈரசாங்கத்தெண்ணெய் ...	௭௧	௪௱௰
மேகரணங்களுக்குத்தீபப்புகை ...	௭௮	௪௫௰
யானைக்கால்தீர லேகியம்	௮௧	௪௯௬
வண்டுகடிக்குமருந்து	௰௮	௯௬
வண்டுகடியைப்போல் மேகமுண்டென்பது..	௰௮	௯௮
வராககிரி...	௩௰	௧௬௫
வயிற்றுக்கடுப்புக்கு	௩௪	௧௯௧
வல்லாதி	௩௫	௧௯௬
வயிற்றுவலி விக்கல்சோகைமலக்கட்டுகிரிமிக்கு	௩௬	௨௧௧
வல்லாதிதயிலம்......	௪௰	௨௨௫
வண்டுகடிதடிப்புக்கு சவ்வீரக்களிம்பு ...	௫௨	௨௯௬
வயிற்றிரைச்சல்பேதிக்கு	௫௫	௩௧௰௮
வலிகளுக்குசாதிலிங்கக்கட்டு	௫௮	௩௩௧
வாய்ப்புண்ணுக்குஎண்ணெய்... ...	௮	௪௨
வாய்வுகுத்தலுக்குகியாழம் ...	௧௪	௭௪
வாய்வுகளுக்கு	௫௧	௨௯௧
விக்கலுக்கு	௪	௫௫
விஷங்களுக்குநசியமும்கலிக்கமும் ...	௪௯	௱௩
விதவைவைபக்கூடப்பிள்ளையில்லாதிருக்க ...	௨௧	௱௰௪
விற்புருதிக்குமருந்து	௩௧	௱௭௫
வியாதியஸ்தனுக்குப்புத்திகூறல் ...	௮௮	௫௱௧
விஷமூட்டித்தயிலம்	௭௪	௪௨௩
விஷங்களுக்குமெழுகு	௭௫	௪௩௨
வேதுநீர்	௪௮	௨௭௧
வேதுதண்ணீர்	௬௮	௩௯௨
வைத்திய மூப்பு	௨௯	௩௬௧
வைத்தியர்க்குப்புத்திகூறல்	௮௮	௫௱
வைத்தியனுக்குச்சகுனம் ...	௪௮	௱௭௫

அகராதி

முற்றிற்று- முற்றும்

உ

கடவுள்-துணை.

புலிப்பாணிமஹாமுநிவர்

அருளிச்செய்த

வைத்தியம் ரு௱.

காப்பு.

எண்சீராசிரியவிருத்தம்.

அண்டரண்டமாகிநின்றவரனேகாப்பு .... *
ஆநந்தமாகிநின்ற வுமையாள்காப்பு .... *
குண்டமெனுங் குண்டலி * யங் குசனேகாப்பு ... ... *
குமரகுரு வேல்முருகர் பாதங்காப்பு .... *
புண்டரிக மானதிரு மாலுங்காப்பு .... *
புகழ்பிரமன்முதற்*குலிசனவர்காப்பு .... *
சண்டமெனுமாருதம் போல்வைத்தியத்தில் .... *
சாற்றுகிறேன் போகருட பாதங்காப்பே .... *

*அங்குசன்-விநாயகன். *குலிசன்-வைரவன்.

நூல்,

சுரமாத்திரை,

காப்பாகசூரக்குளிகைசொல்லக்கேளு, கருவானகௌரியதுவி
ராகனைந்து,சேப்பாகமிளகதுவு மதிலேபாதி,திறமானவுழுந்ததுவு
மிதுநேரப்பா, வேப்பாகவிருசரக்குக்கல்வத்திட்டு விதமாகவுருக்க
ம்பாற்றன்னாலாட்டிப், பாப்பாககௌரிக்கு கவசங்கட்டிப் பாங்கா
க * ரவிமுகத்தில் வைத்திடாயே ... ... (உ)

*ரவியில் - வெய்யலில்

வைத்தவுடனெடுத்துவந்து துணிமேற்சுற்றி வகையாகவெள்
ளாவிதன்னில்வைத்து, கைத்தவுடனெடுத்துபின் கவசம்வாங்கி கன
மாக*அமுரியினால் கழுவிப்போட்டு, செத்தவுடன்ரவிதனிலே*க
டிகைவைத்து செயலானகல்வத்திலிட்டுநீயும்,உய்த்தவுடன்*பாச்சா
ணவாட்டித்தண்ணீ ருத்தமனேநாற்சாமமரைத்துத்தீரே ... (௩)

அமுரி-மூத்திரம்- பாச்சான்-கள்ளி * கடிகை - நாழிகை

தீரேநீகுளிகையதுசிறுபயறுபோலே திறமாகவுண்டைசெய்
துநிழலுலர்த்தி,சேரேநீசிமிழ்தனிலேயடைத்துக்கொண்டுசெகத்தி

லுள்ளமனிதருக்கு சூரத்துத்துக்கெல்லாம்,பாரோநீசுக்குடைய கியா
ழந்தன்னில் பண்பாகக்குளிகையொன்று கொடுத்துப்பாரு,வீரோநீ
மூன்றுபகல்கொடுக்கும்போது விதமான நால்முறையின்சுரங்கள்
போமே ... ... (ச)

போமேநீ பத்தியமா யறுநாள்காரு பொங்க மூடன் வெந்நீ
ருஞ்சாதமாகும், ஆமேநீமற்றொன்று மாகாதப்பா அடவாக ஏழா
நாள் சலத்தைவாரு,நாமேநீ மிளகுடனே சிறுகீரைவேரும் நலமாக
க் கியாழம்வைத்துக்கொள்ளச்சொல்லு, போமேநீ பத்தியந்தான்
முறிக்கச்சொல்லிப் புனிதமுடன் மற்றுநாளெல்லாஞ்சேரோ- (ரு)

சன்னிக்குமேல்பூசத்தயிலம்,

சேரோநீ சன்னிக்குத் தயிலமொன்று செப்புகிறேன் புலிப்பா
ணி விளக்கமாக, வீரோநீ வேப்பெண்ணெய்ப் படிதானென்று வி
தமான*கார்த்திகையின்* கிழங்குதண்ணீர்,பாரோநீபடிதண்ணீரள
ந்துவாரு பாங்கானகருநாபி விராகனென்று, கூறோநீ வசம்பதுவும்
விராகனேந்து கொடிதான வெள்ளுள்ளி விராகனஞ்சே ... (சு)

* கார்த்திகைக்கிழங்கு - கலப்பைக்கிழங்கு
* கிழங்குதண்ணீர் - கிழங்குச்சாறு
* வெள்ளுள்ளி - வெள்ளைப்பூண்டு

அஞ்சான* காயமதுவிராகனென்று அப்பனேஓமமதுவிரா
கனேந்து, தஞ்சானசதகுப்பைவிராகனேந்து சாதிக்காய்*வெந்தோ
ன்றிவிராகன்பத்து, மஞ்சான இவையெல்லாங்கிழங்குநீரில் மைந்த
னே மைப்போலே யரைத்துப்போடு, தஞ்சான எண்ணெயிலே க
லக்கிக்கொண்டு தயவாக காய்ச்சுபதந் தன்னில்வாங்கே ... ... (எ)

*காயம்-பெருங்காயம்-
*வெந்தோன்றி - ஆகாசகருடன்கிழங்கு

வாங்கியெண்ணெய் மேல்பூசச் சன்னிபோகும் வகையானகு
டைச்சல் முதல்வாதம்போகும், பாங்கியே உள்ளுக்குக் கொடுக்
கொணாது பாங்காக மஞ்சளிட்டுச் சாணமிட்டு, தாங்கியேநீரிட்டுக்
கழுவிப்போடு தய்வாக இந்தஎண்ணெ யுறுதிமெத்த, ஏங்கியே ய
லையாதேயப்பாசொன்னேனிதமாகவைத்தியந்தானின்னங்கேளெ()

சூதகவலிக்குஉப்பு

கேளேநீசூதகத்தின் வலிதான்போக கெடியாகசொல்லுகிறே
னென்றுயக்கேளு, வீளேநீபோகாமலுப்பைவாங்கி விதமான*கரந்
தையுடசாற்றாலாடி, நாளேநீகாயவிட்டுப்புடத்திற்போட்டு நாயக
னே யிம்முறையாயைந்துதிரு, பாளேநீபோகாம லெடுத்துக்கொ
ண்டு பண்பான* ஆண்செருப்படையின்சாறே... .. ...(கூ)

*கரந்தை-கொட்டைக்கரந்தை-
*ஆண்செருப்படை-சிறுசெருப்படை-

சாற்றுலேயைத் துபுடம்போட்டாயானுற்சார்வாகச்செங்கணீ றுபோலேயாகும், பார்த்தாலே குடோரியது இதற்கொவ்வாது ப ஸ்பானசூதகத்தின் வலியேகண்டாய், மாற்றுலே எலுமிச்சம் பழ ச்சாற்றுலேமைந்தனேயகஸ்தியனுர்குழம்பைக்கேளு, ஏற்றுலே ப ணவெடைதான் சாற்றிற்சேர்த்து இதமாகஉள்ளுக்குக் கொடுத்தி டாயே.....................................(ய)

கொடுத்திடவேபேதியது அதிகங்கண்டால் குணமாகவசம்பது னை கருக்கிக்கொண்டு, அடுத்திடவோர் படிசலந்தான் கூடவார்த்து அடவாக எட்டொன்றாய்க் குறுக்கிக்கொண்டு, கடுத்துடனேகொடு த்துவிடு பேதிநிற்கும் கருவாகப் பத்தியமாய்க் காரு காரு, சடுத்த மில்லைபச்சரிசியயற்றினோடு சார்வாகபத்தியந்தானுப்பாகாதே(யக)

ஆகாதுமற்றொன்றுபாகாதப்பா அடவாக மற்றுநாள் மருந் தைக்கேளு, சாகாதவெள்ளுள்ளித் தயிலம்வாங்கி சாதகமாய்த்துட் டெடைதா னென்றில்வார்த்து, நோகாதுமுன்சொன்ன வுப்பை மைந்தா நோய்தீரவிராகனென்று பொடித்துப்போடு, போகாத சூதகமாம் வலிதான்தீர புகட்டிவிடு தயிலமதைக் கொடுத்திடா யே ....(யஉ)

கொடுத்திடுவாயிந்தமுறை நாண்மூன்றப்பா குணமாக பத்தி யமாய்க்காக்கச்சொல்லு அடுத்திடுவாய் பச்சரிசிபருப்பினோடு அட வாக புனற்பாகமாகக்காய்ச்சி, சடுத்தயில்லைக்கொடுத்துவிடு உப்பா காது சார்பாகவைந்தாநாள் தலையைமுழுகு, நடுத்திடுவாயுப்பதுவு ம் வறுத்துக்கூட்டு நலமாகமற்றுநா ளெல்லாமாமே........(யந)

பெரும்பாட்டுக்குமருந்து

ஆமேநீபெரும்பாடு வந்தபேர்க்கு அடவாகநாவல் பட்டை யெருமைமோரில், தாமேநீ துவைத்திடித்துப் பிழிந்துக்கொண்டு தயவாக சந்தனந்தான் விராகனெந்து, நாமேதான் புளித்தமோர் தி னிற்கலக்கி நாயகனே கொடுத்துவிடுநாண் மூன்றப்பா, வீமேநீ பெரும்பாடு எங்கேபோச்சு விதமாக பத்தியந்தா னில்லைத்தா னே ....(யச)

குன்மம்ஆறுக்கும்உப்பு.

தானேநீ குன்மவகையாறுந்தீர தயவாக உப்பொன்று சொல் லக்கேளு மானேநீவுப்பதுவும் படிதானென்று மைந்தனே யெரு மைமோர் படிதானென்று, வானேநீ வரிக்குமட்டிச் சாறுநாழிவ கையான இந்துப்பு வெடியுப்போடு, தேனேநீ சவுட்டுப்ப வளய லுப்பு தெளிவாக வகைவகைக்கு விராகனெல்றே............(யரு)

ஒன்றாகஇதையெடுத்துப் பாண்டத்திட்டு உத்தமனே மோரு டனேசாறும்விட்டு,பன்றாக அக்கினியி லெரிக்கும்போது பதமுமதி

ப்பது சர்க்கரைபோலாகுங்,குன்றுகப் பாண்டத்திலெடுத்தலர்த் திருணமாக உதயாதி* அன்னநீரில்,நன்றாகவிராகனெடையுப்புரண் டுநலமாகத்தான்போட்டுக் கொடுத்திடாயே........ ....(௧௬)

*அன்னநீர் - பழந்தண்ணீர்-

கொடுத்திடுவாய் மண்டலந்தானிந்தவிதங் குணமாக அவரவர் க்கு நாள்தான் தள்ளு, தொடுத்திடுவாய் வாயுவென்றகட்டிப் போகு ந்தொந்திப்புச் சோகைப்போம் பொருமற்றீரும், படுத்திடுவாய்க விசையோடு கிரிச்சினங்கட் பாழான கெண்டைமுதற் பறந்துபோ கும்,கடுத்திடுவாய் அருவையென்ற சட்டிப்போளுங் சடலானஉப்பு டையதிறந்தான்காணே...................................(௧௭)

நீரடைப்புக்குவாழைக்கிழங்கின்நீர்

காணென்றநீ ரடைப்புக் கண்டபேர்க்குகனிவாக வாழையுட கிழங் கைத்தோண்டி, ஊணேநீ மற்றுநாட் பார்க்கும்போது உத்தம னே வாழையுள்ளே தண்ணீர்நிற்கும், வீணேநீ போகாமற் கிழங் குதண்ணீர்விதமாக அரைப்படிதா னெடுத்துவந்து,பூணேநீவெடி யுப்பு விராகன்ரண்டு போட்டிலேகொடுக்க நீர்க் கட்டுபோ மே ....(௧அ)

மெத்தலைவியாதிக்கெண்ணெய்,

போமேதான் மெத்தலையின் வியாதிதீர பொங்கமுடனெள் ளெண்ணெய் படிதானென்று, தாமேதான் பசுவின்பால் படிதா னென்று தயவாக கம்பஞ்சோற்றின் நீரைவிட்டு, வேமேதானுதொ ண்டையிலையைத்தானும் விதமாகத் தால் துவைத்துச் சாறுநாழி, வாமேதான் மிளகதுவும் பலந்தான்ரண்டுவளமாகத்தானுடைத்துப் போட்டிடாயே........... ....(௧௯)

போட்டதொரு மிளகதுவு மிதக்கமட்டும் பொங்கமுட னக் கினியிலெரிக்கவேண்டும், நாட்டவே யிறக்கிலவத்து வடித்துக்கொ ண்டு நலமான மிளகதனையரைத்துக்கூட்டு, ஊட்டவே உதயாதி துடங்குமுன்னே உத்தமனேதலைமுழுகி யமுதுகொள்ளு, காட்ட வேகண்டையிடி கண்ணுக்குத்து காலமேமுழுகிவர வோடிப்போ மே ....(௨௰)

அண்டவியாதிக்குஎண்ணெய,

போமப்பா அண்டத்தின் வியாதி வந்தாற் பொங்கமுட னெ ண்ணெயொன்று சொல்லக்கேளு, ஆமப்பா போகருடகடாக்ஷத்தா லே அடவாகப்புலிப்பாணி முறையைச் சொல்வேன், தாமப்பாவி ளக்கெண்ணெய்ப்படிதானென்று தயவான மிளகு தக்காளிச்சாறு வாமப்பா படியொன்று அளந்துவாரு வளமான வெந்தயந்தான்ப லமும்ரண்டே ....(௨௧)

ரண்டான வெந்தயத்தை சும்மாப்போடு நினவுகள்தான் மிச

காம லெரிப்பாய் நீயே, உண்டான வெந்தயந்தான் மொருமொரு ப்பானால் உத்தமனே கடுகோடே ஊற்றிக்கொள்ளு, பண்டானவெ ண்ணெயைத்தான் கொள்ளவென்றால் பாங்காகப் படியரைக் கால் கொள்ளச்சொல்லு, திண்டான கற்கமது கரண்டிகொள்ள திறமாக மூன்றுநாள் முறையாய்க்கொள்ளே (உஉ)

கொள்ளவே பத்தியந்தா னென்று மாகா கொடிய தோரா று நாட்காரு காரு, தெள்ளவே உப்பாகாபுளியுமாகா தெள்ளிமையா ய்சாதமன்றி சுவைகளாகா, மெள்ளளேபத்தியந்தா னேழாநாளின் மேன்மையாய்த் தான்முறித்து எல்லாங்கொள்ளு, உள்ளவே அண் டமென்ற வியாதிபோகும் உத்தமனே நாட்சென்றால் போகாதெ ன்னே (உரு)

ஒருதலைநோய்க்குநசியம்

போகுமப்பா ஒருதலையின் வியாதிரோகம்பொங்கமுடன் *சமுத்திராப்பழத்தை வாங்கி, ஆகுமப்பாபெருங்காயம் நேராய்ச் சேர்த்து அடவான பெண் முலைப்பாலதனை லாட்டி, ஏகுமப்பாகு ளிகைபோல் செய்துக்கொண்டு இதமான பெண்முலைப்பால் தனி லுரைத்து, வேகுமப்பா நாசியிலேவிட்டபோது விரண்டோடியக ன் றுவிடும் வீரந்தானே... ... ... (உசு)

*சமுத்திராப்பழம் - சவுரிப்பழம்

பீநசத்துக்குநசியம்

வீரந்தானின்னமொரு வுபாயங்கேளு விதமான மாதளம் பூ *அருக்கன்பூவுங், காரந்தான் குங்குமப்பூ மூன்றும் நேராய் கல்வ த்திலாட்டியிதைமுலைப்பால்விட்டு, சோரந்தானில்லாமல் நாசியிலே பிழியச்*சோரியென்ற பீநசந்தானேமூந்திரும், பாரந்தானில்லைய ப்பா சூக்ஷமாகப்பாடினேன் புலிப்பாணிவிளங்கத்தானே... (உடு

*அருக்கன் - எருக்கன். *சோரி-இரத்தம்

காதுவலிக்கு-எண்ணெய்

விளங்கவே காதிலுற்ற நோய்தனக்குவிதமான மரமஞ்சள்வெ ள்ளைப்பூண்டு, அளங்கவே சுக்கோடு வலம்புரியின் காயும் அடவான கரியசீரகத்திேனாடு, முளங்கவேநண்டிறைச்சி நத்தை யோடு*முசு றுமுட்டைகருங்கோழிமுட்டையோடு, புளங்கவே யிவையெல்லா ம் விராகனென்றுபு துமையிலைக்கள்ளிபுனன்முருங்கைச்சாறேஉசு

*முசுறுமுட்டை - ஒருவித எறும்பின்முட்டை,

சாறென்னவகைக்குவகை படிதான்வீசம்சார்வான பசுவினெ ய்ப் படிதான்காலு, வாறென்னவேப்பெண்ணெய்ப்படி தான்காலு

வளமாக விட்டெரித்து காதிலூற்றி, பாறென்ன பஞ்சுகொண்டுமூ டச்சொல்லு பாங்காக ஈராறுநாள்தான்வாரு, கூறென்னகாதிலுள் வியாதியெல்லாங் குணமாகும் போகருடகடாக்ஷந்தானே... (௨௭)

கண்பட்லந்தீரரத்நாதிகுளிகை

தானென்ற கண்ணிலப்பா படலந்தீர தயவானமிளகுடனேசு கருக்கூட்டி, கானென்றதிப்பிலியுஞ்சங்குங்கூடக் கரிய* மால்தார முடன்புங்கம்வித்தும், வேனென்றஅதிமதூரந் தித்தத்தோடு வித மான பித்தரோகணிபுங்கூட,பானென்ற மனோசிலையு*ஏனக்கொ ம்பும்பண்பான ஆமையுடவோடுங் கூட்டே ... (௨௮)

*மால்தாரம் - அரிதாரம்,

*ஏனக்கொம்பு - பன்றிசிங்கப்பல்

கூட்டப்பாபுவிறகமும் வெள்ளியோடு கொடிதான சேவலின் நெஞ்செலும்புங்கூட்டு, மூட்டப்பா இந்துப்பு இதையெல்லாந்தா ன்மூனையாக ஒவொடையாய் நிறுத்துக்கொண்டு, ஆட்டப்பாகல்வத்தி ல்நந்திபத்திரி அடவாகச்சாறுவிட்டு ஒருநாளாட்டு, சூட்டப்பா அத னுடைபூச்சாறுதானே சொல்லடாஒருநாள்தானுட்டித் தீரே (௨௯)

*நந்திபத்திரி - நந்தியாவட்டஇலை

தீர்த்தெடுத்துக்கயிறு போலுருட்டிக்கொண்டு திறமாகநிழலு லர்த்தி பதனம்பண்ணு, பார்த்தெடுத்து தேனதிலே யுரைத்துப் போடபடலமென்றவகைகளெல்லாம் பறந்துபோகுஞ், சார்த்தெ டுத்து முலைப்பாலி லுரைத்துப்போட சார்வாக வீராறுநாளுக்குள் ளே, யீர்த்தெடுத்த ரத்நாதிகுளிகையென்பார் இருவிழியின் படல மெல்லாம் வாங்குந்தானே ... ... (௩௰)

மாலைக்கண்ணுக்கு,மை

தானென்ற மாலையுடக்கண்ணுக்கப்பா தயவான சுழல்வண்டு சுட்டச்சாம்பல்.வேனென்றகல்வத்தில்போட்டுக்கொண்டுவிதமாகஎ ள்ளெண்ணெய்*நீர்ப்பூண்டுச்சாறும், பானென்ற பருத்தியிலைச்சா றுங்கூட்டி பாங்கான வெள்ளுள்ளிமிளகுபத்து, வானென்றமைப் போலே ஆட்டிக்கொண்டு வளமாக அந்திசந்தி கண்ணிற்போடே

*நீர்ப்பூண்டு - நீர்முள்ளி

போடப்பா நாள்மூன்றுபோட்டபோது பொங்கமுடன் மா லைய தகன்றுபோச்சு, வீடப்பா விளக்கெண்ணெய் வாரவீதம்வி தமாக நாலைந்துமுழுகுப்போது, சாடப்பா அருந்துதி கண்ணில தோற்றுஞ் சார்வாகக்கீழ்ப்பார்வை கண்ணிற்காணு நாடப்பா போ கருடகடாக்ஷத்தாலே நலமாகப்புலிப்பாணி பாடினேனே... (௩௧)

கண்ணில் நீர் வடிதலுக்கு மை

பாடினேன் கண்ணில்நீர் வடிந்துதானால் பரிவாக வரப்பூலா இலையோர்சுத்து, நாடினேன் கருவேலனிலையோர்குத்து நலமான தான்றிக்காய் மாசிக்காயுஞ், சூடினேன் கடுக்காயுங் காசுக்கட்டி சுக மாகவகைவகைக்கு விராகனென்று, கூடினேனிவையெல்லாம் பொ டித்துப்போட்டு குணமாகவேகலைவத்துப் பிழிந்திடாயே... (ருரு)

பிழிந்திடுவாய்க் கரண்டியிலே வேணமட்டும் புனிதமுடன் அ பினியதுவிராகன்கால்தான், செழுந்திடுவாய்*சீனமது பொரித்து க்கொண்டு செயலான பொரியதுவும் விராகன்கால்தான், குழிந்திடு வாயடுப்பிலேகாயும்போது கூசாமலாவரையின்குச்சியாலேதிழிந்தி டுவாய்மைபோலே கடைவாயப்பா சுகமாகக் கண்ணைசுற்றி வழித்து ப்போடே ... ... (ருசு)

*சீனம் - படிகாரம்

போடுமுன்னே புளியிலையைவேகலைவத்துப் பொங்கமுடன் கண்ணையுநீகழுவிப்போட்டு. ஆடுமுன்னே இந்தஇலைவேதுவைத்து அடவாகப்போட்டவுடன்கண்ணீர்நிற்கும், நாடுமுன்னேசிவப்பெல் லாம்வாங்கிப்போகும் நலமான அழுகண்ணுந் தீரும்பாரு, கூடுமு ன்னேஇன்னமொரு வைத்தியந்தான் குணமாகச் சொல்லுகிறேன் கேளுகேளே (ருஎ)

கண்வலிக்கெல்லாம்

கேளப்பா கண்ணுவலிவந்தப்பர்க்கு கெடியான துளசிபுண் ணாக்கிலையினோடு, சூளப்பாபுளியினிலை இந்தமூன்றுஞ் சுகமாகத்த ட்டியதை துணியில்வைத்து வீளப்பா இலையடா*கோளங்கட்டி விதமென்ன தூளதுவும் விராகன்பத்து, பாளப்பாபழம்புளியைக் கரைத்து நீயும் பாங்கான கண்ணுக்குப் பிழிந்துபாரே... (ருஅ)

*கோளங்கட்டி திரட்சியாய்க்கட்டிமுன்சொன்ன

மூவகையிலைகள்பத்துவிராகனெடைகொண்டது

பாரேநீ பொட்டணத்தைப் பிடிக்கச்சொல்லுபண்பாகநாலு தரமொருநாள்வாரு, சேரேநீவார்த்தவுடன் வலிதானிற்குஞ் சிறப் பாகநாள்மூன்று இந்தபாகம், ஆரேநீயைந்தாநாள் சொல்லகேளு ஆவரம்பூ தலையிவிட்டு முழுகச்சொல்லு, கூரேநீ கண்ணுவலியெ ங்கேபோச்சு குருவானபோகருட கடாக்ஷந்தானே ... (ருகூ)

தந்தவியாதிக்கெல்லாம்பொடி

தானேதான்*தந்தமென்ற வியாதிக்கப்பாதயவான்அரப் பொ டியும் பலந்தரனென்று, வேணேதான் பீங்கானில் போட்டுக்கொ ண்டுவிதமாகக்கடுக்காயுந்தான்றிக்காயும், பாணேதான்பாசக்காய்ச்சிறு

காரம், பண்பான கொருக்காயின் புளியுங்கூட, காணே தான் துருசுட னேகாசுகட்டிகணக்காகவகைவகைக்குவிராகன் மூன்றே......(கூஅ)

* தந்தம்-பல்

மூன்றாகஇவையெல்லாம் பொடித்துப்போட்டு முனைஎலுமி ச்சம் பழத்தின்சாறுவிட்டு, நான்றாக வற்றமட் டும்ரவியில்வைத்து நலமாக அம்மியிலேயரைத்திடப்பா, பான்றாகப் பழச்சாற்றில்மை போலாட்டிபண்பாகப்பொடியாக்கிவைத்துக்கொண்டு. கூன்றாகவ றுதினமும்விளக்கிவா நீகொடிதானப்பலரோகமோடிப்போமே ()

பல்புழுச்சாக

போமேநீயின்னமொருவிபரஞ்சொல்வேன் பொல்லாத பு ழுவிருக்கும்பல்லுக்கப்பா, தாமேநீ கன்னியுட நூலைவாங்கிதயவாக நூலதனைசொல்லக்கேளு, ஆமேநீகீழ்க்காயி னெல்லிவேரை அடவா கக்காப்பிட்டு ஆதிவாரம், வாமேநீ பச்சரிசிக் கருப்புக்கட்டி வைத் து-மசி-நசி-யென்று நூறுகூறே.................................(சுய)

கூறேநீநூற்றெட்டு தாமுஞ்சொல்லிக் கூறடா அவன்பேரைச் சொல்லிமைந்தா, பாரேநீ புழுச்செத்துத் தீரவென்று பண்பாக வேரதனை யருமற்றூனுஞ், சேரேநீ பிடுங்கிவிடு மறுநாட்குள்ளே செத்துதடா புழுவங்கே சேரத்தானும், வீரோநீபோகருட கடாக்ஷ த்தாலே விதமாக இன்னமொன்று சொல்லக்கேளே ....(சுக)

வாய்ப்புண்ணுக்குஎண்ணெய்

கேளப்பாவாயெல்லாம்புண்ணேவந்தால் கெணிதமுடனெண் ணெயொன்றுசொல்லக்கேளு, நாளப்பா விளக்கெண்ணெய்படதா னென்று நலமானசங்கஞ்சாற்படிதானென்று, வீளப்பாபாச்சானை வாட்டித்தண்ணீர் விதமாகப் படியொன்று அளந்துவாரு, சூளப் பா நீர்ப்பூண்டுச்சாறுநாழி சுருக்கானகஸ்தூரிமஞ்சள்தானே (சஉ)

* நீர்ப்பூண்டு-நீர்முள்ளி.

தானுனகரியசீரகத்திேனாடு தயவாகவகைவகைக்குவிராகன்மூ ன்று, கோனுனபொடிப்பண்ணி யிதனிற்போட்டு கொடிதான அக் கினியிலெரித்துவாங்கி, பானுனஎண்ணெயைத்தான் பதத்தில்பார் த்து பண்பாகத்தான்வடித்து எடுத்துக்கொண்டு, நானுன படியவா க்கால் வீதங்கொள்ள நாண்மூன்று தான்கொள்ள ரணங்கட்போ மே ....(சங)

போமேநீவாய்ப்புண்ணும் வெள்ளைபோகும் பொங்கமுடன்

தடிப்புவலகைசிரங்குந்தீருந், தாமேநீ சூலையென்றகட்டுந்தீருந் தய வாகப் பத்தியந்தா னுருநாளும், வேமேநீ வெந்நீரு மன்னமாகும் விதமாகமற்றொன்று மாகாதப்பா, வாமேர் யேழாநாள் முழுகும் போது வலகையாகக்கருக்கொன்றுசொல்லக்கேளே... ...(௬௪)

சொல்லுவேன் * குதிரையஸ்தியோமத்தோடு சுருக்கானவுஞ் சவுடப் பட்டைக்கூட்டி, வெல்லுவேன் கருக்கியதை கியாழம்வை த்துவிதமாகவுள்ளுக்கு கொள்ளசசொல்லு, கெல்லுவேனுப்பிட்டப் பருப்பின்சாறுகெணிதமுடனீர்விட்டுஅமுதுகொள்ளு. மல்லுவேன் மற்றுநாள் புளியைக்கூட்டுமைந்தனே பெட்கமிகுமாகாதென்னே()

* குதிரை அஸ்தி - குதிரைஎலும்பு

ஆகாதுவாழைஇலைவாழைக்காயும் அப்பனேயீராறுநாள் தான் தள்ளு, வேகாதுவாயுவென்ற பதார்த்தந்தள்ளு விதமானப் பெண் ணுடைய மாய்கையாகா, போகாதில்லாவிட்டால் வியாதியப்பா பொ ங்கமுடன்தானிருந்தால் பறக்கும்பாரு, நோகாது கிரந்தியெல்லாம கன்றுபோகும் நோய்தீரும் போகருட கடர்க்ஷந்தானே... (௬௬)

மேகதடிப்புபுள்ளிக்கு

தானென்றதடிப்புக்குச் சொல்லக்கேளு தயவானபாச்சாணை வாட்டித்தண்ணீர், பானென்ற படிக்கால் தான் வடித்துக்கொண்டு பண்பாகநாள்மூன்று கொடுத்தபோது, கானென்றதடிப்பெல்லா மோடிப்போகுங் கனலானப்புள்ளியென்ற மேகந்தீருங், கோனெ ன்றமூன்றுகெடுக் கொள்ளும்போது கொடிதாகமுன்போல்பத்தி யமாய்க்காரோ ... ... (௬எ)

அரையாப்புக்கு

காரடா அரையாப்பு வந்தபேர்க்கு கருவாக மருந்தொன்று சொல்லக்கேளு, பாரடா * கொல்லனுடக் கொவ்வைமூலம் பண்பா கமேற்றோலை நன்றாய்ப்போக்கி, சேரடா * அப்பையுடக் கொவ்வை மூலஞ் செயலானவகைவகைக்குப் பலந்தான்ரண்டு, கூரடாகொடி வேலிப் பட்டையப்பா கொடிதாகப்பலமொன்று போடுபோடே

* கொல்லங்கோவைமூலப் - ஆகாசகெருடன்கிழங்கு

* அப்புக்கொவ்வைமூலம் - கற்கோவைகிழங்கு

போடேநீநீர்ப்பூண்டு பலந்தான் ரண்டுபொங்கமுடனிதுவெ ல்லாம் நறுக்கித்தட்டி, சூடேநீவிளக்கெண்ணெய்படிதான்பாதிசுக மான எள்ளெண்ணெய்படிதான்பாதி, நாடேநீமிருதாருசிங்கியப்பா

நாயகனே விராகன்ரண்டுபொடித்துப்போடு; கூடேநீ யிவையெல்
லாமொருமொரொன்று கூடயிலேயின்னமொன்று சொல்லக்கேளே

கேளேநீ சூலைவிடக்*கருப்புக்கட்டிகெடியாகப்பலம்ரண்டுசீ
விப்போட்டு, வீளேநிபோகாமலிறக்கிவைத்து விதமாகப்பலமரை
தான்கொள்ளச்சொல்லி, சூளேநிபெண்ணெயொருகாண்டிக்கொள்
ள சுகமாகுமீராறுவேளையப்பா,கோளேநீவராமற்பத்தியத்தைக்கே
ளு கொடிதாகஉப்பிட்டபருப்புநெய்யே... ... (௫௰)

*கருப்புக்கட்டி - கற்கண்டு

நெய்யப்பா பசுவினெய் வெந்நீராகும் நேராக அன்னமப்பா
மற்றொன்றுகா, மெய்யான எண்ணெயைத்தான் மேலிற்பூசி மேன்
மையா யேழாநாள் நீரைவாரு,வெய்யானபுளியுட்னேயெல்லாஞ்சே
ரு விதமாகக்கட்டியது கரைந்துபோகுஞ், செய்யானபுரைகண்டா
ல்கிழித்து வார்த்துச் செப்புவேன் ரணங்கண்டால் * களிம்பைப்
போடே ... ... (௫௧)

களிம்பு - பளாஸ்திரி

போடேநீவிளக்கெண்ணெய்முழுகச்செய்வாய் பொங்கமுட
னுள்விட்டுநாள்தானப்பா,நாடேநிமுழுக்கப்பா பத்துநாளும்நலமா
களெண்ணெயைத்தான் முழுகும்போது, கூடேநீபெண்மாய்கையா
காதப்பாகுணமாகிமாசமொன்றுசெல்லுமட்டும், ஆடேநியனாயா
ப்புதீர்ந்துப்போகும்அடவாகப்போகருடகடாக்ஷந்தானே (௫௨)

சகலரணங்களுக்கும்களிம்பு.

தானப்பா களிம்பொன்று சொல்க்கேளு தயவான லிங்கமு
டன்மிருதார்சிங்கி, ஊணப்பாரசகர்ப்பூரத்திரேடு உத்தமனேவெ
ள்ளையென்ற குங்கிலிய ந்தான்,கோணப்பாகடுக்காயு மாசிக்காயுங்கு
ணமானகாசுக்கட்டித்தான்றிக்காயும்,வாணப்பா ஒரெடையாய்க்கல்
வத்திட்டுவகையாகத்தானாக்க விபரங்கேளே ... (௫௩)

கேளேநி பசுவினுடவெண்ணெய்ப்போட்டு கெணிதமா யொ
ருசாமமரைத்தபின்பு, சூளேநீ தண்ணியிலே மிதக்கவைத்து சுகமா
கமற்றுநா ளெடுத்துக்கொண்டு, கோளேநீ சூலையப்பாரணத்திற்பூ
சகொடிதானரணங்களெல்லா மாறிப்போகுங்,வேளேநீகளிம்பதுவு
ஞ்சுருக்குமெத்த விதமாகஇன்னமொன்றுவிளம்பக்கேளே (௫௪)

விக்கலுக்கு,

விளம்புவேன்விக்கலுக்குச்சொல்லக் கேளுவிதமாகச்சந்தனத்

திங்கட்டையோடு, தளம்புவேன் சாம்புராணி சமனாய்ச் சேர்த்துத யவாகப்பொடிப்பண்ணிக் காகிதத்திற், குளம்புறேன்சுருட்டியதை புகைப்பிடிக்க குணமாகவிக்கலது தீரும்பாரு, விளம்புறேனின்ன மொன்று சொல்லக்கேளு விதமாகக் கவிக்கமொன்று சொல்லு வேனே ... ... (ருரு)

சன்னிகள்பசாசுகள் விஷங்கள், மயக்கத்துக்கு-அகத்திசர்கலிக்கம்

சொல்லுவேன் கிராம்போடு மிளகுசுக்குசுகமான துவரையெ ன்ற பருப்புங்கூட்டி, வெல்லுவேனிவையெல்லாம் விராகனென்று விதமாக அகத்தியனார்க் குழம்பைக்கேளு,சொல்லுவேன் விராகன துகால்தான்கூட்டிசுகமான*மேனிச்சாற்தனலாட்டி,மல்லுவே ன் வெற்றிலையின் சாற்றாலாட்டி மைந்தனே கயிறதுபோல்வைத்துக் கொள்ளே ... ... (ருசு)

*மேனி - குப்பைமேனி

கொள்ளடாமுருங்கையிலைச்சாற்றில் தேய்த்துக்குணமாகக்க ண்ணிமேலேபோட்டபோது,மெள்ளடா சன்னிமுதற் பசாசு போகும் மேன்மையாய் விஷமோடு மயக்கம்போகும், விள்ளடா போசருட கடாக்ஷத்தாலே விளம்பினேன் புலிப்பாணிவிளக்கமாக, கள்ளடாம னத்தோர்க்குக் காட்டொணாது கருவான வைத்தியந்தா னின்னங் கேளே ... ... (ருஎ)

முகசன்னிக்குஎண்ணெய்.

கேளேநீமுகசன்னிக் கெண்ணெயொன்றுசெணிதருடன்தே ங்காய்நெய் படிதானென்று, சூளேநீவசம்பினொடு வெள்ளைப்பூண் டுசுகமாக ஓமமொடு சதமாங்குப்பை, வாரேநீவகைவகைக்கு விரா கன்பத்து வளமான பெருங்காயம் விராகனென்று? ஆளேநீமாவிலி ங்கம்ஆலின்பட்டை அப்பனேநொச்சியொடுபெருமரமுமாமே ()

ஆமேநீபட்டைவகை சொல்லக்கேளு அடவாக வகைவகைக்கு விராகன்பத்து,தாமேநீயிவைபெல்லாமிடித்துமைந்தா!-தயவாகசா க்கெல்லாம் பொடியாய்ப்பண்ணி வேமேநீயெண்ணெயிலேபோட் டுக்காய்ச்சி விதமானகடுகுபதந் தன்னில்வாங்கி,போமேநீமுழுகிட வேபறக்குஞ்சன்னி பொங்கமுடநாள்விட்டு நாள்தான் மூழ்கேருக

சன்னிக்குஎணணெய

முழுக்கைவிட்டு எண்ணெயொன்று சொல்லக்கேளு முறிந் தோடுஞ் சன்னியபபா எண்ணெய் கண்டால்,பழுக்காவேப்பெ ண்ணெய் படிதானென்று பண்பான சிறுபானை தன்னில்வார்த்து, அழுக்கான மயிற்பீலி யிலைதான்பத்து அப்பனே நறுக்கிநல்லாய

தனிற்போடு, சுழுக்கான சூடனோடு சாம்பிராணி சுககோடுதிப்பிலியு
*மரத்தைக்கூட்டே ... ... (௯௰)

*அரத்தை - சிற்றரத்தை

கூட்டப்பாபெருங்காயமோமத்தோடு குணமான கிராப்பப்
பாமிளகுக்கூட, நாட்டப்பாரசகர்ப்பூரத்திறேனாடு,நலமான தேசவர
ஞ்சதமாங்குப்பை,கூட்டப்பா இவையெல்லாம் பொடியாய்ப்பண்
ணிதுணமானசீலையிலே முடிந்துகொண்டு,சாட்டப்பாவ கைவகைக்
கு விராகனென்று சாதகமாயடுப்பேற்றித்தீயைமூட்டே... (௯௧)

மூட்டப்பா சிறுசட்டிக்கொண்டுமூடி முக்கியமாய்க் குப்புற
வேமூடவேண்டுங், காட்டப்பா அக்கினியையெரித்தபோது கடிதா
களண்ணெயிலே தீயேபற்றுப், மாட்டப்பா அலையிறக்கி வைத்த
போது மைந்தனே சுடர்காட்டபற்றுப்பாரு, மூட்டப்பா சட்டி
கொண்டு மூடும்போது முக்கியமடாதணலடங்கி வாசமாமே (௯௨)

ஆமேறியடுப்பைமிக* அணைத்துப்போடு அப்பனேயாறவி
ட்டுஇறக்கிவைத்து,தாமேநீசட்டியிலேவடித்துக்கொள்ளு தயவான
இஞ்சிச்சாற்படியுங்கால்தான்,வேமேநீ வெள்ளுள்ளித்த யிலமப்பா
விதமாகக்கால்படிதானளந்துவாரு; போபேநீ*அண்டத்தின்தயில
மப்பாபொங்கமுன்படிவீசமதிலேவாரே ... (௯௩)

*அணைத்தல், தீயாற்றல்

*அண்டத்தின்தயிலம் - கோழிமுட்டைத்தயிலம்

வாரேநீசுக்கப்பா விராகனூறு வகையாக சலமதுதால் படிதா
னூவு, சீரேநீபொடிபண்ணிக் கியாழம்வைத்து சிறப்பாகக்கால்படி
தானதிலேவாரு, பாரேநீ யொட்டைத்தூள் கழஞ்சியொன்று பா
ங்காகஅடுப்பேற்றித்தீயைமூட்டி, கூரேநீ கடுகுபதத்தனிலிறக்கிகு
ணமாகக்கலசத்தில்வார்த்திடாயே ... ... (௯௪)

வார்த்தவுடன் கணபதியை துதித்துநாடி வகையாக சோடச
மூர்த்தூபஞ்செய்து, பார்த்தவுடனுள்ளுக்குக் கொடுத்தபோது பா
ங்கானசன்னிமுதல் வலிப்புதோஷங்,காத்தவுடன் மூன்றுநாள்கொ
டுக்கும்போது காடாபத்தியந்தா னென்றுமாகா. சேர்த்தவுடனே
மூ"நாள் நிரைவார்த்து செயலானஉப்புமுதல் கூட்டலாமே (௯௫)

சோகை,காமாலை,வீக்கம்.நீர்கோவை
பாண்டு,மகோதரம்பிலிகை
இவைகளுக்குகியாழம்

ஆமேறி நிர்முள்ளி கீழ்க்காய் நெல்லி அப்பனே வீழிவேர்
கோவ்வைத்தண்டு வாமே நிருவாசம்பட்டை *கையான் வளமான
*செந்தொட்டிவேரினோடு தாமேதிசிறுபூளைவேரினோடு தயவாகச்

*சம்புடைய தூளிருமப்பா, நாமேநீநெருஞ்சில்வேர்சிறுகீரை யின் வேர்நலமாய் நிலவாகை ஊஞ்சல்பட்டைக்கேளே ... ... (௬௬)
*கையான் கரிசலாங்கண்ணி *செந்தொட்டி-செங்காஞ்சொறி
* சம்பு - நாவல்,

கேளேநீ ஊஞ்சலென்ற பட்டைக்கூட்டி கெணிதமுடன் வகைவகைக்குப்பலந்தானாறு, சூளேநீ சரக்குவகை சொல்லக்கேளு சுகமானகடுக்காய் ரோகணிபுங்கூட்டி, வேளேநீகருஞ்சீரகத்தினோடு விதமானகாட்டுச்சீரகமுங்கூட்டு, பாளேநீயில்லையப்பாதிப்பிலியுங் கூடப் பண்பான வகைவகைக்குவிராகனாறே....... ...... (௬௭)

ஆறேநீயிவையெல்லா மிடித்துத்தோண்டி அடவாகஆறுபங்காய் நிறுத்துக்கொண்டு, ஊறேநீயொருபங்கு பாண்டத்திட்டு உத்தமனே நாலுபடிசலத்தைவார்த்து, கூறேநீ யெட்டொன்றாய்க்குறுகக்காய்ச்சி குணமாகத்தான்பிழிந்துவடிதான்கட்டு, சேரேநீ கொடுத்துவர ஆறுநாள்தான் செயலானபத்தியந்தானுப்பாகாதே (௬௮)

ஆகாதுசோகைகாமாலைவீக்கம் அடவானநீர்க்கோவை பாண்டுபோகும், போகாதமகோதரமும் பீலிகையும் போகும்பொருமலுடன் மேலிளைப்புந்தீர்ந்துபோகும், நோகாது ஏழாநாள் நீராவாரு நுணுக்கமாயுப்பிட்டப்பருப்புங்கூட்டு, வேகாதுமற்றநாள் புளியுஞ்சேரு விதமாகஇந்தநோய் தீரும்பாரே ....(௬௯)

பித்தவெடிப்புக்கு

பாரேநிபித்தவெடி வந்ததானாற் பாங்கானமருதுடைய இலையைவாங்கி, சீரோநிபசுவின்பாற் றனிற்றுவைத்துச்சிறப்பாகமூன்று நாட்குடிக்கச்சொல்லு, வீரேநீபத்தியந்தான் பாலுஞ்சோறும் விதமாகஏழாநாள்நீரைவாரு, பேரேநீபோகருடகடாக்ஷத்தாலே பேதமில்லைப்புலிப்பாணிபாடினேனே ....(௭௰)

நீரிலிரத்தங்கண்டால

பாடினேனீர்தனிலே ரத்தம்வீழ்ந்தால் பாங்காகப்புழுங்கரிசி பலந்தானொன்று, கூடினேன்விராகனிலை பலந்தானொன்று குணமாகவரிசியைத்தா னூறவைத்து, சாடினேனிடித்தெடுத்துக் கொடுப்பாயப்பா சார்பாகமூன்றுநாளாறுவேளை, நாடினே னிந்தவிதங் கொடுத்தபோது நடுநடுங்கியோடிவிடுந் திண்ணந்தானே ... (௭௧)

முழங்காலவாதம்

தானென்றமுழங்காலின்வாதத்துக்குதயவாகவீழியிலைப்புண்

ணுக்குப்பூண்டுங், கோனென்றஆவனாயி னிலையுங்கூட குணமாகஇலைமூன்றுஞ் சமனாய்ச்சேர்த்து, தேனென்றவெள்ளுள்ளிப் பூண்டோமூன்று தெளிவாகத்தானிடித்து எடுத்துக்கொண்டு,வேனென்றவிளக்கெண்ணெ யொன்றில்விட்டு விதமாகவேதிட்டுக் கட்டிப்போடே ... . (௭௨)

போடேநீ யிந்தவிதமாறுநாளும் பொங்கமுடன் வேதிட்டுக்கட்டும்போது, ஆடேநீமுழங்காலின் வாதமெல்லாம் அகல்வோடிபோய்விடுமகலத்தானே-கூடேநீநாட்சென்றால் பிடித்துக்கொள்ளுங் குணமாகமாட்டாது கூர்ந்துபாரு; தேடேநீபோகருடகடாக்ஷத்தாலேதெளிவாகபுலிப்பாணி விளம்பினேனே....... ..... (௭௩)

இரணங்களுக்குப்புகை

விளம்பினேனின்னமொரு கருவைக்கேளு விதமானரணங்களென்றவியாதிக்கெல்லாந், தளம்பிறேன் * கொழுஞ்சியுடவேரும் பட்டைதயவாகநூறவைத்து நையத்தட்டி, குளம்பிறேன் சுங்கானில்பட்டையிட்டு குணமாகலிங்கமப்பா விராகன்பாதி, நளம்பிறேன் சுங்கான்மேல் வைத்துப்பின்னும் நலமாக மூன்மட்டை நிறையமூடே... ... ...(௭௪)

மூடியபின்தணலைவைத்துப் புகையைவாங்கி முக்கியமாய் விழுங்கியதை சுவாசந்தன்னில், நாடியமூன்றுள்மூன்று வேளையாகும் நலமாகக்குடித்தவுடன் பாற்சோறுண்ணு, தேடியபின்னைந்தாநாட் பத்தியமாகக்காரு.தெளிந்தபின்புஆறுநாள்தலையைமூழ்கு,பாடியபின்னேழாநாளுப்பைக்கூட்டுப் பண்பாக எட்டாநாள் புளியைச்சேரே ... ...(௭௫)

தீரும்வியாதி

சேரப்பாகரப்பனென்ற வகைகளெல்லாஞ்சிறப்பாக ஈராறுநாள்தான்தள்ளு-பாரப்பாகண்ணுவலி கண்ணேசையோடு பாங்கானவிற்புருதி கண்டமாலை வீரப்பாஅரையாப்புச் சூலையோடு விதமானபிளவையொடு லிங்கப்புற்று - கூரப்பாரணங்களென்ற நோய்களெல்லாங்கூசாமலோடிவிடுங் கொள்கைபாரே........ ... (௭௬)

வாயுவுகுத்தலுக்குக்கியாழம்

பாரப்பாவாயுவென்ற குத்துக்கேதான் பண்பானகொடிவேலிபட்டையோடு-வீரப்பாசுக்குடனே பறங்கிப்பட்டைவிதமானபிரம்பினிட கிழங்குக்கூட-சேரப்பாவகைவகைக்கு விராகன்மூன்று செயலானநாலுபடிசலத்தைவிட்டு-கூரப்பாஎட்டொன்றாய்க் கியாழம்வைத்துக்கொடுத்தவுடன்வாயுவென்ற மேகம்போமே...... (௭௭)

போமப்பா அந்திசந்திமூன்றுநேரம்பொங்கமுடன்குடித்து விடவாயுதீரும்-ஆமப்பாபத்தியந்தானுப்பாகாது அடவாகவைந்தா றாளெல்லாங்கூட்டு - வாமப்பாகொடிவேலி சுருக்குங்கூட்டி வகை யாகக் கியாழம்வைத் துண்டபோது-தாமப்பா கொடிவேலி சுருக் குமெத்த தபவாகவாயுவெல்லாங் குணமதாமே .... (எஅ)

கிரந்திக கெணெண்யப்

குணமாகப்பூசினிக்காய்ச் சாறுபடிரண்டு குருவானதாழையு டவிழுதுச்சாறு- மணமாகுங்கற்றாழை குமிழின்சாறு மைந்தனே நெல்லிக்காய்கையான்சாறும், வணமாகும்வல்லாரைவில்வத்தோடும் வளமான*கொடுப்பையப்பாவிழியோடு-சிணமாகும்ஆதொண்டை இலைநீர்ப்பூண்டு சிறப்பான அப்பையுடக்கிழங்குதானே ... (எகூ)

*கொடுப்பை-பொன்னாங்காணி

தானென்றபாச்சாணை வாட்டித்தண்ணீர் தயவான சங்கோடு நீர்ப்பூலர்வு-மானென்ற தென்னையுடப்பாளையப்பா மைந்தனேதக் காளிஇலையினோடு-கோனென்றஆணையுட நெருஞ்சிலோடு கொதா ன ஆல்விழுதும் அறுகன்வேரும்-பானென்றவகைக்குச் சாற்படி பொன்றாகும் பாங்கான பாண்டத்தில் விட்டிடாயே ... ... (அ௰)

விட்டவுடன்சாறுவரா மூலிஎல்லாம் விதமாகநீர்விட்டுப்பிழி ந்துகொண்டு- சட்டமுடன்அடுப்பேற்றி வற்றக்காய்ச்சி சட்டிதனை இறக்கியபின் சொல்லக்கேளு-கட்டவுடன்இளநிரும் பசுவின்பாலுக் கருவானபனிநீரும் காடித்தண்ணீர்-குட்டமுடன்*கோசலமும் அ த்திநீருங்குணமாக வகைவகைக்குப் படிதான்வாரோ......... (அக)

*கோசலம் - கோமயம்-

வாரேநீஇவையெல்லாம் எட்டொன்றாக்கி வைகையாகஎண் ணெயப்பாவடிக்கக்கேளு- சீரேநிசிற்றாமணக்கின் முத்தைவாங்கிச் சிறப்பாகக்காடியிலே ஊறவைத்து-தீரேதீபசுவின்பால் விட்டுமை ந்தா திறமாகவேகவைத்து உலரப்போட்டு-காரேநீ இளநீராலெண் ணெயூற்றிக் கணக்காகஐந்துபடி எண்ணெய்வாரே.........(அஉ)

வார்த்தபின்பு வேருவகைச் சொல்லக்கேளு வகைபான நில ப்பனையும்*அசுவகெந்தி, காத்தபின்புநிலக்குமிழுஞ் சித்திரமூலங் கருவானதாமரையின்கிழங்கினோடு,எத்தபின்புபூமிச்சர்க்கரையுங்கூ ட்டி இதமான அத்தியின்வேர்*நீர்நெருப்பு,சேர்த்தபின்பு வகைவ

கைக்குபலந்தானென்று சேர்த்தரைத்து எண்ணெயிலே போட்டி டாயே... .....(அங)

அசுவகெந்தி-அக்கரூக்கிழங்கு நீர்நெருப்பு-கல்லுருவி

போட்டபின்பு சாக்குவகை சொல்லக்கேளு பொங்கமுடன் சாதிக்காய் சாதிபத்திரி, கேட்டபின்பு லவங்கமதிமதுரமாஞ்சில் கெணிதமாய்ச் சோம்போடேலமப்பா, மூட்டபின்பு திரிகடுகுதிரிபலாதி முக்கியமாய் வெந்தயசீரகமுமாகும், நாட்டபின்பு கஸ்தூரிமஞ்சளோடு நலமானரோசனையும் பூரமாமே.......................(அச)

ஆமேநீவால்மிளகு கசகசாவும் அடவான சிறுநாகங்கடுக்காய்ப்பூவும், வாமேநீமல்லிகை தாளிசமாம்பத்திரிவகையான*சிறுலவங்கங்கார்பே கர்தான், தாமேநீசீனிக்கற்கண்டினேடுதலையான*கூகைநீறு*மூத்தக்காசும், ஆமேநீவகைவகைக்குக்கழஞ்சிமூன்று அடவாகப்பொடிப்பண்ணிப்போட்டிடாயே..........................(அரு)

*சிறுலவங்கம்-சன்னலவங்கபட்டை.
*மூத்தக்காசு-கோரைக்கிழங்கு.
*கூகைநீறு-கூகைக்கிழங்கின்-மா.

போட்டபின்பு ஆவிநெய்ப்படிதானைந்து பொங்கமுடன்தானளந்து அதனில்வாரு, நாட்டபின்பு மெழுகுபதந்தனிலிறக்கி நாயகனேகிட்டுகோடே ஒன்றிலூற்றிக், கூட்டபின்புகணபதியைப் புகழ்ந்துநாடி குருவினுடதாள்பணிந்து பூசைசெய்து, ஆட்டபின்பு எண்ணெயொரு கரண்டிகொள்ளு அடவாகபத்தியந்தானில்லைத்தானே..(அசு)

தானென்றவாயிலே தான்புண்ணினேடு தயவாகத்தடிப்புமுதல்புள்ளிமேகம், வானென்றசெங்கிரந்தி கருங்கிரந்திவளமானபிரமியங்கள்கிரந்திபுண்ணு, கோனென்றபெருஞ்சிரங்குசிறுசிரங்குகொடிதானமேகங்க ளிருபத்தொன்றுந், தேனென்றதேகமப்பா அருணன்போலாந் தெளிவான போகருடகடாக்ஷந்தானே ......(அஎ)

மேகம் உகஇம், வாய்நாற்றத்திற்கும் எண்ணெய்

தானாகஇன்னமொன்று சொல்லக்கேளு தயவான விளக்கெண்ணெய்ப்படிதான்ரண்டு, மானாகஇளநீரும் பசுவின்பாலு மைந்தனேகாடியுடன்பொன்னாங்கண்ணி, கோனாகஆதொண்டை இலைவல்லாரைக் குணமானவில்வயிலை அருகன்வேரும், வானாகவள்ளியையும் வாட்டித்தண்ணீர் வளமாகநீர்பூண்டுசாணிப்பாலே.......(அஅ)

பாலப்பாவல்கைவகைக்குபடிதானென்றுபாங்காகசரக்குவகை சொல்லக்கேளு,சாலவேவெந்தயஞ்சீரகத்தினேடு சார்வாகக்கொத்

ல்லி சிறுநாகப்பூ, கோலமுடன் சாதிக்காய் கிராம்பு ஏலங் குணமா
ன அதிமதுரங், கூகைநீறுஞ், சேலமாய்ச் சீனமென்ற காரந்தானுஞ்
செயலான வகைக்குவகை விராகனெடைநேறே...............(௮௯)

ஒன்றான இவையெல்லாம் பொடித்துப் போட்டுஉத்தமனே
சர்க்கரைதான் பலமேயொன்று, பன்றாகக் காய்ச்சி யதுமெழுகதா
னால் பக்குவமாய்த்தான் வடித்து எடுத்துக் கொண்டு, நன்றாக துட்
டெடை தான் கொள்ளும்போது நலமாகு மண்டலத்தில் சூட்டத
ப்பா, வென்றாகமேனியதுஊறும்பாரு விதமாகவாய்நாற்றம் போ
கும்பாரே.. (௯௰)

பாரப்பா போகருட கடாக்ஷத்தாலே பண்பான புலிப்பாணி
விளங்கத்தானுஞ், சீராகக்கொக்கோகத்திரட்டொன்றப்பா திறமுட
னே நூற்றைம்பதுவுஞ்சொன்னேன், கூரப்பாவாடை பதினாறிற்சொ
ன்னேன் குருவானஞானமொடு தொண்ணூற்றாறு, வீரடாசொகிய
மூல் ஞூற்றுக்குள்ளேவிளம்பினேன்நேத்திரம்போல் தோணும்பா
ரே..(௯௧)

எலிகடி-ம்அ-க்கும்

பாரேநீ யின்னமொன்று சொல்லக்கேளு பதினெட்டு எலிக்க
டிக்கு மருந்தைஅப்பா, வீரேநீகரும்பூனை மலத்தைவாங்கி விதமா
கக்கழற்சிக்கா யளவுதானுங், கூரேநீ யோலையுடக் கருப்புக்கட்டிகு
ணமாக முள்ளிக்காயளவுசேர்த்து, சேரேநீமூன்றுநாளாறுவேளை
செயலகக் கொண்டிடவே தீரும்பாரே.. ....(௯௨)

பாரப்பா ஆறுநாள் பத்தியமேகாரு பண்பான உப்புமுத
லொன்றுமாகா, வீரப்பா ஏழாநாள் தலையமுழ்த்து விதமாக உப்
பிட்டபருப்புமாகுஞ், சேரப்பாஎட்டாநாளெல்லாங்கூட்டுச் செய
லாகநாட்சென்றால்சொல்லக்கேளு, கூரப்பாமூன்றுகெடு கொண்ட
போது குணமாக எலிகடிகள் தீருந்தானே..................(௯௩)

பேய்நரிநாய்கடிக்குமருந்து

தானென்ற பேய்நரிநாய்க் கடித்ததானால் தலைமுத்தமணித்தக்
காளி யிலைச்சாறப்பா,பாவென்ற படிக்கால்தான் கொடுப்பதப்பா
பாங்காக மூன்றுநாளாறுவேளை, கோவென்று பத்தியந்தானப்பா
காது குணமாகு மேழாநாள்நீராவாரு, வேனென்றபேய் நரிநாய்க்
கடி தான்தீரும் விதமாகு மிதின்தலைமுழுகையமேலேபூசே .. (௯௪)

பூனைகடிதீரமூலிகை

பூசியேபூனையுடக் கடிதான்தீர புனிதமுள்ள *பூனைதொழும்
பட்டைவாங்கி, ஆசியேபசுவின்பால் தனிலரைத்து அப்பனேபத்தி

* பூனைவணங்கி- தப்பைபமேனி,தொழும்-வணங்கும்.

யமாய்க் குடிக்கச் சொல்லு. கூசியே முன்போல பத்தியமேகாரு குணமுள்ள நீலிவேர் தனை அரைத்து, வாசியே ஈராறு நாளும்பூச வலகையாகப் பூணகடித் தீருந்தானே .. ..(௬௫)

வண்டுகடிக்குமருந்து

திருமப்பா வண்டுகடி வந்தபேர்க்குத் திறமாக மருந்தொன் று சொல்லக்கேளு, மாருமப்பா வெள்ளாட்டுக் கறுத்த பாலு மைந்தனே தினையரிசி படிதான் காலு, வீருமப்பாமூலியொன்று அறியச்சொல்வேன் விதமான ஆடுதொடாமூலிச்சாறு, கூருடனே வேகவைத்து அந்திசந்தி குணமாகக் கொண்டிடவேதிரும்பா ரே ....(௬௬)

படரேநீ சாறுதுதான் படிதான் வீதம் பண்பான பத்தியந்தா னுப்பாகாது, கூரேநீ வெள்ளாட்டுப் பாற்சோறுண்ணு குணமாக ஏழுநாள் நீரைவாரு, சேரேநீவசம்புடனே நீலிவேருஞ் சிறப்பாக த்தாணரைத்துப்பூசபூசு, நீரேநீவண்டுகடியெல்லாப்போகுந்திறமா னமேபோகருடகடாக்ஷந்தானே.................................(௬எ)

தானேதா னிதுபோல விஷமுமுண்டு தயவான மேகவகையி லும்போலுண்டு கூனேதான் செய்தொழிலுமிதுபோலுண்டு குடில மாய்த் தாமரையு மிதுபோலுண்டு, சோனேதா னிதுபோலேதீரா விட்டால் துணிவாகரசபதங்கம் கொள்ளச்சொல்லு, ஊனேதான்க கண்டுகண்டுமருந்துசெய்நீ உத்தமனே இல்லாட்டாலேய்க்கும் பா ரே ....(௬அ)

பூரான்கடிதீர

பாரப்பா பூரான்தான் கடித்தபேர்க்குப் பண்பானஎருக்கம் பூநரம்பைப்போக்கிச், சீரப்பாபூவேழு கொடுத்துப்பாரு,சிறப்பா க*ஞாளிமலம் புகையைக்காட்டுக், கூரப்பா நாட்சென்றால் மண் டலங் கொள் குணமாகப் பத்தியந்தா னில்லைப்பாரு, வீரப்பா பூ ரான் தன்தடிப்பு மாறும் விதமாக அதின் விடமும் தீருந்தா னே ....(௬௯)

*ஞாளிமலம் - நாய்மலம்

செய்யான்பெருச்சாளிகடிக்கு

தானென்றசெய்யான் தான் கடித்தபேர்க்குத் தயவாகக்கொ ல்லனுடக் கோவை மூலம், பானென்றபாக்களவு கொள்ளச்சொல் லுபண்பான*மயிற்பீலி புகையைப்போடு, கோனென்ற செய்யா ன் தன் விஷமும்போகுங் குணமானபெருச்சாளி கடிதான்தீர்க்க, வேனென்ற அறுகம்வேர் வெள்ளிதன்னில் விதமாகக்குடித்தவுடன் தீர்ந்துபோமே..(௱)

*மயில்பீலி - மயிலிறகு.

தேள்காலிவிஷந்தீரமூலிகை

போமப்பாதேள்காலி கடித்தபேர்க்குப்பொங்கமுடன்பெரியநங்கைவேரைத்தானும்,வாமப்பா நீரிலேஉரைத்துப் பூசுவளமாக *மட்டிப்பால் புகையைப்போடு, ஆமப்பா கடுகடுப்பு அடங்கிப்போகும் அப்பனே தேள்காலிவிஷமுந்தீரும் நாமப்பாபோகருடகடாக்ஷத்தாலேநலமாகப் புலிப்பாணிபாடினேனே......... (௱௧)

*மட்டிப்பால் - சாம்பிராணி

சகலவிஷங்களுந் தீரமருந்து

பாடியதோர்விஷங்களெல்லாந் தீரவேதான் பண்பாக எட்டிபழந் தன்னைவாங்கி, கூடியதோர் சட்டியிலேவேணமட்டுங் குணமாகத்தானெடுத்து வேப்பெண்ணெய்விட்டு, நாடியே அடுப்பேற்றிவேகவைத்து நலமாகஉருட்டியதைச் செப்பில்மூடி, ஆடியே விஷந்தீண்டி வந்தபேர்க்குத் தூதுவளங் காயளவு கொடுத்திடாயே.. (௱௨)

விஷத்துக்கு-நசியம்-கலிக்கம்

கொடுத்திடவேவிஷத்துக்குநசியமொன்று குணமாக நீலமென்ற திரிசைவாங்கி, அடுத்திடவே விராகனரை துணியில்வைத்துஅடவாக சிறுநீரால் நசியம்பண்ணு, எடுத்திடவே விஷமெல்லா மிறங்கிப்போகும் இதமானகலிக்கமொன்று இயம்பக்கேளு, தொடுத்திடவே சிறுபூளை கசக்கிக் கண்ணில் தோராமல் சிங்கென்று கொட்டிப்போடே.. (௱௩)

சிறுபாம்புக்கடிககுமருந்து

போடப்பாசிறுபாம்பு கடித்தபேர்க்குப்பொங்கமுடன் சிறுகுறிஞ்சான் வேரைவாங்கி, நாடப்பா வெந்நீரா லரைத்துக் கொண்டு நலமாகஅந்திசந்திமூன்று நாளுண், வாடப்பா பத்தியந்தானுப்பாகாது வளமானஏழுநாள் சலத்தைவாரு; சாடப்பா சிறுபாம்புதடிப்புமாறுஞ் சார்பாக போகருடகடாக்ஷந்தானே... (௱௪)

குஷ்டத்துககுமந்து

தானென்ற குஷ்டநோய் வந்த பேர்க்குத் தயவாகமருந்தொன்று சொல்லக்கேளு,ஊனென்ற செவ்வலரிவேரையப்பாஉலரவிட்டுக் குழித்தயில மாகவாங்கிப், பானென்ற நூப்பிதனி லடைத்துக்கொண்டு பண்பாகச்சிறுகுச்சித்தயிலத்திட்டு,ஏனென்ற ஒருதுளித்தண்ணீரில்குத்தி இதமாகத் தால்கலக்கிக கொடுத்திடாயே (௱௫)

கொடுத்திடப்பாநாள்மூன்றுகாலைவேளை*குருதியப்பாவடி

*குருதி - இரத்தம்.

யுமடா ரணங்கள்தோறும், அரைத்திடப்பா பத்தியந்தா னுப்பாகாது அடவாக ஏழுநாள் நீரைவாரு, விடுத்திடப்பா உப்பிட்டபருப்புக்கூட்டி விதமாகமற்றநாள் புளியைச்சேரு, எடுத்திடப்பாகுஷ்டநோய் தீர்ந்துபோகும் இதமானபோகருட கடாக்ஷந்தானே.... (௱௬)

மருந்தீட்டுக்குசிட்சை

தானாக இன்னமொன்று சொல்லக்கேளு தயவாக மருந்தீடு கொண்டபேர்க்குக், கோணாக எண்ணெயிட்டுமுழுகச்சொல்லிக் குணமாகரசம்விட்டு அன்னமீய்ந்து, வேணாகத் தேங்காயின் பாலை வாங்கி விதமாகக்கரும்பாலைச் சர்க்கரையுஞ்சேர்த்து, வாணாகத்தேங்காயின் பாலையுண்டு வகையாகக் கம்பளமேல்படுக்கச் சொல்லே .... (௱௮)

சொல்லப்பாமுருங்கையென்ற இலையைவாங்கிசோர வேவதக்கியதைச் சாற்பிழிந்து, அல்லப்பா சாறுபடிகாலேயாகும்அடவாக ஆவின்பால் நேரேசேர்த்து, அல்லப்பாகாலமே கொடுத்தபோது அடவாகபேதியிலே மருந்துவிழும், நல்லப்பாவிழுந்த வுடன் ஸ்தானம்பண்ணு நலமாகவேணதெல்லாங் கூட்டிக்கொள்ளே (௱௭)

நஞ்சுண்டவர்க்குங்கெர்ப்பமழிக்கவும்

கொள்ளவேநஞ்சுதின்ற பேர்கட் கெல்லாங் குணமாக *நீலிவேர்பட்டைதன்னை, அள்ளவேகாடியிலே அரைத்துஊட்ட| அடவாகநஞ்சுகக்கிமபக்கம்வாங்கு, மெள்ளவே அளிகருவையழிக்கவேண்டில் மேன்மையாய்சேர்தனையை இடித்துமாப்போல், தள்ளவே பூநீறுபடிதான் போட்டுத் தயவாக நீருபடி யொன்றுவார் .... (௱௯)

*நீலிவேர்-அவிரிவேர்

வாரப்பாபடிகால்தான் வாங்கிக்கொண்டுவகையாகமூன்னீரில்பிசைத்துபின்பு, தாரப்பாஅந்திசந்திமறுநாளொன்று தான்கொடுக்ககர்ப்பமது அழிந்துவிழுங், கூரப்பா இந்நீரைமூன்றுநேரங் குறிகண்டால் மாவப்பா கொடுக்கப்போகா, சேரப்பா இந்தரிசிகஞ்சிவைத்துசிறப்பாகக்கருப்புக்கட்டி போட்டுக்கொள்ளே...(௱௰)

கொள்ளவேஉதிரமது அதிகங்கண்டால் குணமான வேப்பின் பட்டை நனைத்துவைத்து, தள்ளவே மோருவிட்டு பிழிந்துக்கொண்டு நலமாக ஒருநாளி லாறுவேளை, மெள்ளவே கொடுத்துவிட உதிரம்நிற்கு மேன்மையா யாறுதிங்களப்பாகேளு, தெள்ளவேகுச்சியிலேதுணியைச்சுற்றி தெளிவாகஎருக்கம்பால் தடவிவையே(௱௰௧)

வைப்பா * அல்குலிலேவிரலைவிட்டு வகையாகச்சுற்றியங் கே பார்க்கும்போது, ஐயப்பாஉந்தியுடப்பள்ளம்போலே அடவாகக்கு ழியொன்று இருக்கும்பாரு, வையப்பாகருக்குழிதான் வாயைமூடி வகையாகத்தானிருக்கு மறிந்துபார்த்து, கையப்பாவிரலோடேகு ச்சியிட்டுக்கணக்காகநெல்நீளம் வைத்துப்பாரே... ...(௱௰உ)

* அல்குல்-பெண்குறி

பாரப்பாஉதிரமது காணுமட்டும் பண்பாக இம்முறை போல் பாங்காய்வைநி,சேரப்பாமல்லார்ந்து படுக்கச்சொல்லு செயலாகவி டியமட்டுமிந்தபாகம், வீரப்பாஇப்புவலிசரமுங்காணும் விதமா னத்தலைவலியுமதிகமாகுங், கூரப்பாதிங்களொரு பத்தானாலுங் கு ணமாகக்கழிந்துவிடுந் திண்ணந்தானே ... (௱௰௩)

விதவையைகூடபிள்ளை இல்லாதிருக்க

தானப்பாகன்னிபர்கள் விதவைகூடித்தான் தழுவவேணுமெ ன்றால் சொல்லக்கேளு,வானப்பாதலைமுழுதும் * பக்கந்தன்னில்மை ந்தனே புணர்ந்திடவே சேர்ப்பமில்லை, வீணப்பா இதுவறியமாட் டாமல்தான் விதமாகக்குலைகள்வந்து நேரும்பாரு,ஊணப்பாஇது வல்லோபாவம் பாவம்உத்தமனே அறிவாலேஅறிந்துதானே(௱௰௪)

* பக்கம்-வீட்டுக்குதூரமாகிறபட்சத்தில்-

பார்வைக்குக்குளிகை

தானென்ற பார்வைக்குக் குளிகைசொல்வேன் தயவாகபுண் ணாக்கிலையம்வீழியோடும்,மானென்றஆவிரையுஞ்சங்குகோவைமை ந்தனே சின்னிபொடு * முட்டைநாறி, வானென்றநில்வாகை,* இராச கனிவித்து வளமானமுசல்காது வாகைப்பை, கோனென்றகேளி யுடஅவரையப்பா குணமான அறுகம்புல் தக்காளித்தானே (௱௰௫)

* முட்டைநாறி-எருமுட்டைப்பீநாறி.

* இராசகனி வித்து-எலிமிச்சம்பழம்.

தானப்பா * வேலியென்ற பருத்திகூட்டித் தயவானமிளகாயி னிலையுஞ்சேர்த்து, பானப்பா * பெருமருந்து இலையுங்கூடப் பண் பானதோதகத்தின்மேனியப்பா, ஆணப்பா இலுப்பையுடஇலையுங் கேளு அடவாகவகைக்கு வகைவிராகனைந்து,ஊணப்பா பெருங்கா யம்விராகனைந்து உத்தமனே * சீனமதுவிராகனஞ்சே... (௱௰௬)

* வேலிப்பருத்தி-உத்தாமணி * பெருமருந்து-தலைச்சுருளி.

* சீனம்-படிகாரம்

அஞ்சப்பா இவையெல்லா மரைக்கும்போது அடவாகஎலுமி ச்சம் பழச்சாற்விட்டு, மஞ்சப்பா நாற்சாமமரைக்கும்போது மைந் தனே மெழுகதுபோலிருக்கும்பாரு, தஞ்சமாய்க் குளிகையப்பா கழஞ்சிவிதம் தான்சேர்த்து நிழலுலர்த்திப் பதனம்பண்ணு, வஞ் சமில்லாமந்திரத்தை ஆயிரந்தானுரு வகையாக தேவிக்குப் பூசை செய்யே ... . (௱௰எ)

தேவிக்கு ஏகமூலம்

செய்பவேமந்திரந்தான் அம்- உம்-ஓமென்று செப்படாமம் மோடேதீயுஞ்சேரு, பைபவேஸ்ரீயுடனே சிங்கு- வங்கு- பண்பாக ஆயிரத்தெட்டேயோது, நையவேபார்வையுடன் சூனியங்கள் நன் ருகத்தீர்ப்பதற்குக் குளிகையொன்று, உய்யவே அப்பையுடசாற்றி ற்கொள்ளு உறவானதேங்காயில் பாவிற்கொள்ளே ... (௱௰அ)

சூநியந்தீரப்புகை

கொள்ளப்பாமஞ்சளைநீ யரைத்துப்பூசு குணமானவெந்நீரில் ஸ்நானம்பண்ணு, அள்ளப்பாபுகையொன்று சொல்லக்கேளு அட வான எட்டிவிரைஎட்டிப்பட்டை, கள்ளப்பா செக்கடிக்கீழ்மண்ணு ம்மஞ்சள் கனிவானகொட்டைவிரைத் தூளுங்கூட்டி, உள்ளப்பாமா விலிங்கம் ஆலின்பட்டை உத்தமனேவேம்பின்மேல்காக்கைகூடே (௱௰௯)

கூடேநீஆமையுடஓடுங்கூட குணமான குதிரையட குளம்புங் கூட்டி, ஆடேநீபாம்பின்சட்டைதீட்டுச்சீலை அடவாகக்காக்கணம்பூ சிறகோரைவேரு, நாடேநீமாட்டுக்கொம்பு மூஞ்சூறுத்தோல் நலமில் லாக்கம்பிளியுமுசுறுமுட்டை, சாடேநீ இவையெல்லாம் நன்றாய்ச் சேர்த்துசார்பாகத்தானிடித்துஎடுத்துக்கொள்ளே ..(௱௨௰)

கொள்ளப்பா இந்தெடைக்குக் குங்கிலியங்கொடிதாகத்தானி டித்து எடுத்துக்கொண்டு, மெள்ளப்பாபுகைபிடிப்பாய்அந்திசந்தி மேன்மையாய் மத்தியமென்ற வேளைமூன்றும், தள்ளப்பாஏவலெ றகுணங்கள்யாவுந்தருவான புதைபில்லி ஆக்கைவைப்பு, விள்ளப்பா சக்கரங்கள் ஓலைவாட்டல் விதமானவேர்பிடுங்கல் தீருந்தானே (௱௨௧

பிரம்மைக்கு அண்டம்

தானென்றபிரம்மையது கொண்டபேர்க்குத் தயவாகமருந் தொன்று சொல்லக்கேளு, கோனென்ற போகருட கடாக்ஷத்தா லேகுணமான புலிப்பாணி விளக்கஞ்செய்தேன், ஊனென்றகபா லத்தை எடுத்துவந்து உத்தமனே எலுமிச்சம் பழச்சாற்றாலே, நா னென்றதீனமதைப் பொடித்துப்போட்டு நலமானகல்வத்தி லரைத் திடாயே (௱௨௨)

அரைத்தெடுத்துவில்லைதட்டி யுலரப்போட்டு அடவாக புடம்போட்டு எடுத்துக்கொள்ளு, விரைத்தவுடன் பொடியாக்கிப் பதனம்பண்ணி விதமாகவிராகனெடைக்கொடுக்கக்கேளு, உரைத்தவுடன் * கத்தபத்தின் பாலையப்பா உறவாகதுட்டெடைதான் ரண்டேயாகும், குறைத்தவுடனிஞ்சிச்சாறிதனிற்பாதிகுணமாகவிதுநேர்சர்க்கரையுங்கூட்டே ... ... (ருஉரு)

*கத்தபம் - கழுதை

கூட்டப்பாகூராறு நாளேகொள்ள குணமாக அந்திசந்தி யிந்தபாகம்,ஆட்டப்பாநசியமது அம்மைச்சாறு அடவாக தான்விட்டுச்சொல்லக்கேளு,குட்டப்பா பேய்ப்பிரக்குப் பேய்பிரட்டிசுகமானம்பப்புடலும்பேய்க்குமட்டி, நாட்டப்பா பேயத்திபேயாந்தும்பை நலமான எலுமிச்சம் பழமுமாமே ... (ருஉச)

ஆமேநீயிச்சாற்றைத் தேய்த்துதேய்த்து அடவாக நூறுகுடஞ்சலத்தைவாரு,தாமேநீயீராறு நாள்தான்வாரு தயவாகபத்தியந்தான்சொல்லக்கேளு, வாமேநீபச்சரிசி பருப்பினொடு வளமாக தான் கொடுப்பா யுப்பாகாது,ஆமேநீதேவரொடு பிரமைபித்தம் அடவானவஞ்சனையுந் தீருந்தானே ... ... (ருஉரு)

கிரகசாரத்துக்கு

தீருமப்பாசாந்தியொன்று சொல்லக்கேளு திட்டமாய்க்கிரகமென்றசாரந்தீர, சாருமப்பாபனிரண்டு ராசியோர்க்குச் சகலமுமாங்கிரகங்க ளிருக்கும்வாறு, வீருமப்பா வீடடைத்துத்தகடுதன்னில்வீதமாய்க்கும்பம்வைத்துச்சோடசஞ்செய்,கூருமப்பா ஓமமுதல் சாந்திக்கெல்லாம் கூறுவேசமந்திரத்தைச் சொல்லக் கேளே

நவக்கிர கதியானம்

கேளேநீநவக்கிரகதியானஞ்சொல்வேன் கெணிதமுடன்-அம் ஸ்ரீயும்-சம்--ஸ்ரீயும் ஆளேநீஸ்ரீநசி-ஸ்ரீமசி-ஸ்ரீம்-உம்-கிலி அடவாக சாச்சறீநசி- அங்கிஷிநசி- யென்று, நாளேநீ ஆயிரத்தெட்டு ருவை யோதிநலமாக சாந்திசெய்துமருந்தையூட்டு, கோளேநீ கடிவிஷங்களெல்லாம்போகுங் கொடிதான அசாத்தியமென்றுஞ் செய்யொணாதே ... ... (ருஉஎ)

செய்யாதேபொய்க்கோபஞ் சொல்லதிருட்டுச் செயலானவைத்தியங்கள் செய்யும்பக்கம், வையாதே பெண்களுடன் சேர்ந்திடாதேமையல்மிகக்கொள்ளாதே கிருதுசெய்யாதே, வையாதேயவரிடத்தில்வீண்பேசாதே வகையான வல்வசையே சொல்லிடாதே, பையாதேதேகமதில்தேனையுண்டு பண்பான வண்டதுபோல்பொருளைச்சாரே ... ... (ருஉஅ)

சூனியத்துக்கெண்ணெய்

சாராதேசூநிபங்கள் தீர்க்கஎண்ணெய் சாற்றுகிறேன்சுடுதுறு த்தி* தவமுருங்கை, வீராதேமுயல்காதுசெந்நாயுருவி வினையாகுங் கோவைமிளகுதக்காளி, சீராதேநாய்ப்பாகல் வட்டத்துத்தி சிறப் பான* அசுவகந்திசிறுகீரைச்* சூரி, மீராதேநிலவாகைநன்னாரிப்பா லைமிதமாக வேர்க் கால்பலஞ்செப்பினேனே... ... (௱உக)

* தவமுருங்கை-தவசுமுருங்கை* அசுவகந்தி-அமுக்கரா.
* சூரி-நத்தைச்சூரி.

செப்புநெருஞ்சியு முருங்கைவாகையோடு செழித்திருக்கு* மூட்டியுடன்நாமக்கோவ்வை, கப்புவேப்பேய்ப்பருத்திக் கண்டங்கத் திரிகடியமருளு மத்தைப்பேய்ப்பீர்க்கப்பை, வெப்பகலவருமேனி பெருந்தக்காளி வேடிதமாஞ்சின்னியிலை இவைகள்சாரும் அப்புமி துவகைக்குவகைபடியதாக அளந்துவிட்டு எட்டொன்றாய்க் குறுக் கிவாங்கே ... ... (௱கூய)

* மூட்டி-பேராமூட்டி.

குறுக்கியேஎள்ளெண்ணெய்நாழிவிட்டுக்கூறியமுன்வேரின் வகைசூரணித்து, குறுக்கியேயலைத்த திகைப்பூண்டுமூன்று தணி யும்வவ்வால்தோல்பலமரைக்கால்சேர்த்து,குறுக்கியேவெம்பாடமுவ ள்ளிபோடமும் மூனையானகருஞ்சீரகமுங்கிராம்பு, பெருக்கியகாயங் கோஷ்டஞ்சாதிபத்திரி பேணுங்கோரோசனையு மூனையாக்கூட்டே

மூனையாக வகைக்கரைக்கால் பலமதாக மூட்டியிடி சூரணமு ம்பொடியுமொன்றாய், வினையறுக்கு மெண்ணெயிலேபொடியும் போட்டு விரவிவெந்து மெழுகுபதந்தனில்வடித்து,எனையாளுங்க ணபதிக்கு மலருஞ்சூட்டி யெழுபழங்காய் தக்ஷிணையும் வைத்துப் போற்றி,பனையவேதேகமதில் தவளைபோட்டால் பறக்குமேசூநிய ங்கள் பகரக்கேளே ... ... (௱கூஉ)

கேளேநீமுகமாறு மாங்கிஷிந்தெரிதல் கெடியம்புதான்றெரி தல்முட்டுச்சூனியம்,நீளேநீபாவமூட்டு விளக்கெரித்தல் நீலையாணி மூளையடித்தல் அட்டைத்தத்தல், சூளேநீபெண்கட்டு ஆணின்கட் டுசுருக்காக அனலெரிவு குடல்கள்வெப்பு, வாளேநீகம்பியொடுசூஸ் திரங்கள் வட்டதிலதம் மெதிரோற்றஞ்சூனியமாமே ... (௱கூகூ)

சூனியமாங்கட்டை தன்னில் புதலிபாம் புச்சுணங்குடனேடக் சோந்த விரியன்பல்லி, வானியபுலிமுயல்கழுதைப்பன்றிவலுமூத ளைநரியுடும்பு தவளைமீன்கள், ஈனிபானை எலிபட்சி தலையில்வைத்து இதமாகஈமமொடு சந்திபாதை, கானியாமோலை முதல்சக்கரம்வாட் டுக்கடுப் பெதிர் வைத்திடு சூனியமும்போமே... ... (௱கூச)

போரானநாம்புசுற்றி யுடம்பெரிவுதானும் பொலிவுடனேவி
காரமுடன் ரத்தம்விக்கல், நேரானபாவைசெய்து மூடக்கலாக்கி நி
லையாதபிரம்மையொடு மயக்கஞ்செய்தல், மாரானகண்படலங் கண்
டமாலை மதிகெட்டவிப்புருதி மாருட்டங்கள், வீரானகொடிமரங்க
ங்கள் பாவைவைப்பு வெடிமலங்கள்வஞ்சனை சூனியமும்போமே)

மூலரோகத்திற்குச்சூரணம்.

போமேநீமூலமென்ற ரோகந்தீரப் பூட்டுகிறேன்மருந்தொன்
று சொல்லக்கேளு; ஆமேநீதூதுவேளை மூலத்தோடு அடவானமரு
ட்கிழங்குகருணைமூலம், தாயேநீபிரண்டைவேர் நல்ல ஆரை தயவா
னகாட்டுடையக்கருணைமூலம், வாமேநீமிளகருணைமூலத்தானும் வ
ளமானஅறுகினுடக்கிழங்குதானே ... ...(௱௩௬)

*மூலமென்பது-கிழங்கு- அல்லது-வேர்

தானென்றநீர்ப்பூண்டுகிழங்குமூலி தயவாகவுரலி லிட்டுத் தூ
ளாச்செய்து, கோனென்ற பொடியெல்லாஞ் சமனாய்ச் சேர்த்துக்
கொடுப்பாயே விரற்கடைதான் தேனிற்கொள்ள, நானென்றநாற்ப
துநாள்கொள்ளும்போது நடுநடுங்கி மூலமெல்லாம் ஓடும்பாரு,வா
னென்றபோகுருட கடாக்ஷத்தாலே வளமான புலிப்பாணி விளம்பி
னேனே ... ... (௱௩௭)

கிரந்திஅரையர்ப்புக்குஎண்ணெய்.

விளம்புகிறேனெண்ணெயொன்று சொல்லக்கேளு விதமான
சங்கோடுசங்கங்குப்பி, உளம்புகிறேன்கருநொச்சி சுடுதரத்திலைத்த
மனேவெள்ளறுகு சின்னியோடு, தளம்புகிறேன்கிரந்தி நாயகமும்
கூட தயவானபூவரசம் பட்டையோடு,குளம்புகிறேன்பாச்சாணைவா
ட்டித்தண்ணீர் குணமானநீர்ப்பூண்டுச்சாற்றாவாரே... (௱௩௮)

வாரப்பாவகைவகைக்குப் படிதான்வீதம் வகையாக அளந்து
விட்டுஎண்ணெய்நாழி, சேரப்பாவொருநாள்தான் ரவியில்வைத்து
சிறப்பாகமற்றுநாளனலைமூட்டி, மாரப்பாஎட்டொன்றாய்க் காயும்
போதுமைந்தனேசரக்குவகை சொல்லக்கேளு,கூரப்பாபறங்கிபட்ட
ப் பட்டைதானும் குணமானகருஞ்சீரங்கார்போகாமே... (௱௩௯)

ஆமேநீகஸ்தூரிமஞ்சளோடு அடவானவசம்புடனே வெள்ளை
ப்பூண்டு, தாமேநீவகைவகைக்கு விராகனைந்து தயவாக எண்ணெயி
லேபொடித்துப்போடு, வாமேநீமெழுகுபதந் தனில்வடித்து வகை
யாகபடியளாக்கால் கொள்ளச்சொல்லு,போமேநீமூன்றுநாள்கொ
ண்டபின்பு பொலிவானபத்தியந்தானாறுநாளே ... (௱௪௰)

நாளான எழுநாள் தலைமுழுகு நலமானவுப்பிட்டப்பருப் பைச்சேரு, கோளான நாற்பதுநாள் *கடுகொள்ளாதே குணமானவா ழையிலைவாழைக்காயுந், தேளானகரப்பனென்ற தெல்லாந் தள்ளு தெளிவான பெண்மயக்கஞ்சற்றுமாகா, பாளானகிரந்தியனாயாப்பு ச்சூலை பண்பானமேகமெல்லாந் தீருந்தானே ... (கசக)

* கடு கசப்பு.

பிரமனுக்கும்-வாசவனுக்குஞ்சர்பம்

தானானமுன்யுகத்தில்பிர்ம்மாவுக்குத் தாயானபார்வதியாள்தந் தசாபம், கோனானதண்டாயுதத்தைப் பூசைசெய்து கொடிதானசா பமதுநிவர்த்தியாச்சு, தேனானதிரேதாயின்யுகத்திலப்பா தேவேந்தி ரனுக்குத்துருவசர்சாபம் மானான * தேவர்கோன் பூசைசெய்து மைந்தனே முனிசாபந்தீர்ந்துபோச்சே ... (கசஉ)

*தேவர்கோன் - தேவேந்திரன்

கற்சிலை.

போனபின்புசொக்கலிங்கந்தன்னிற் சென்று பொன்னுலகில் தேவேந்திரன் பட்டமாச்சு, ஆனபின்புதுவாபுரியில் போகநாதர்அ டவானகற்சிலையில் அம்மிடனென்று,கோனபின்பு கொங்கணருங்கரு வூராரும் கூட்டிவந்துமுன்விட்டாரையன்முன்னே, தேனபின்புக ற்சிலையைச் சேர்ந்தபோது சிந்தைதனிற் சிலையென்று அறிந் திட் டாரே ... ... (கசங)

*கற்சிலை-உருப்பட்டகல்

அறிந்தபின்பு அச்சிலையைப்பார்த்து அம்மாஅபசாரமடியே ற்குநிவர்த்தியென்ன, வரிந்தபின்பு சிவகிரியில் தண்டபாணி மன் னவனைப்பூசிக்க நிவர்த்தியாகும்,புரிந்தபின்பு தேவியென்றசிலைதா ன்சொல்ல போகருமேதுவாபுரியில் பூசைசெய்தார்,சரிந்தபின்புஅ பசாரம்நிவர்த்தியாச்சு சார்வானகலியுகத்தில் சொல்லக்கேளே(கசச

கேளேநீகலியுகத்தி லிருநூற்றைறந்தில்*கேசரிபோல்புலிப்பா ணிபேரும்பெற்றேன், சூளேநீசலந்திரட்டிக் கரத்திலேந்தி சுகமாக வேங்கையின்மேல் ஏறிச்சென்று,நாளேநிசிவகிரியில் தண்டபாணி நாதருக்குப்பூசித்து அருளைப்பெற்று, ஆளேநீபோகருடக் குகை மேலையா அஷ்டசித்திபதிதனிலேவாழ்ந்தேன்பாரே ... (கசரு)

கேசரி - சிங்கம்

மேருவுக்குவடக்குமனிதர்.

பாரேநீயகந்தோறும் சொல்லக்கேளு பண்பான மேருவுக்கு வடபாகத்தில்:நீரேநீமனிதரப்பா தங்கவண்ணம் திகழ்மதியாறுயா

